# தேவகோட்டை வட்டத் திருக்கோயில்கள் வழிபாடுகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய சமூகச் சிக்கல்களும் தீர்வுகளும்

# Scheduled Caste People in Devekottai Taluk and the Social Problem Occurring on Temple Workshop and Solutions

**Final Report of Major Research Project**
**Submitted to**
**University Grants Commission**


Principal Investigator
**Dr. M.PANDI**

**DEPARTMENT OF TAMIL**
**ALAGAPPA UNIVERSITY**
**KARAIKUDI – 630 003**
**TAMILNADU, INDIA**

**Annexure – VIII**

**UNIVERSITY GRANTS COMMISSION**
**BAHADUR SHAH ZAFAR MARG**
**NEW DELHI – 110 002**

**PROFORMA FOR SUBMISSION OF INFORMATION AT THE TIME OF SENDING THE FINAL REPORT OF THE WORK DONE ON THE PROJECT**

| | | |
|---|---|---|
| 1 | Name and Address of Principal Investigator | **Dr. M. Pandi**<br>**Professor & Head (Retired)**<br>**Department of Tamil**<br>**Alagappa University**<br>**Karaikudi – 630 003, Sivaganga – Dist,**<br>**Tamil Nadu** |
| 2 | Name and Address of Principal Investigator | **Alagappa University**<br>**Karaikudi – 630 003, Sivaganga – Dist,**<br>**Tamil Nadu** |
| 3 | UGC approved no. and Date | **F. No. 5, 410/2013 (HRP), dated 19.03.2013** |
| 4 | Date of Implementation | **01.04.2013** |
| 5 | Tenure of the Project | **02 Years (01.04.2013 to 31.03.2015** |
| 6 | Total Grand Allocated | **Rs. 8,64,600/-** |
| 7 | Total Grand Received | **1. First Installment Received** — **Rs. 5, 46,600/-**<br>**2. Second Installment (Rs. 3, 18, 000/-)** — **Not Yet Received**<br>**3. Total Amount received** — **Rs. 5, 46,600/-** |
| 8 | Final Expenditure | **Rs. 4,47,806/-** |
| 9 | Title of the Research Project | **“Scheduled Caste People in Devekottai Taluk and the Social Problem Occurring on Temple Workshop and Solutions”** |

From

Dr. M. Pandi
Professor & Head (Retired)
Department of Tamil
Alagappa University
Karaikudi – 630 003, Sivaganga – Dist,
Tamil Nadu

To

The Special Officer - Project
Alagappa University
Karaikudi – 630 003

Respected Sir,

**Sub:** Submitting the UGC - MRP Final research project report – reg.
**Ref:** F. No. 5, 410/2013 (HRP), dated 19.03.2013.

******

With the above cited reference, UGC sanctioned the amount was Rs***. 8,64,600/- (Eight Lakhs Sixty Four Thousand and Six Hundred)*** for my UGC-MRP entitled ***"Scheduled Caste People in Devekottai Taluk and the Social Problem Occurring on Temple Workshop and Solutions".***

I wish to bring to your kind notice that, I have received the first installment amount of ***Rs. 5, 46,600/- (Five Lakhs Forty Six Thousand and Six Hundred)*** *on 19.03.2013* and I have spent the amount of ***Rs.4,47,806/- (Four Lakhs Forty Seven Thousand Eight Hundred and six)*** from the first installment. I have submitted the UC and research progress midterm report on 17.09.2014 in the UGC.

I haven't received second installment amount of ***Rs.3,18,000/- (Three Lakhs and Eighteen Thousand)*** from UGC till now. But I have completed my UGC – MRP due to my retirement on 31.05.2020.

Hence I request you to return the unspent amount of ***Rs.98,794/- (Ninety Eight Thousand Seven Hundred and Ninety Four)*** to the UGC along with final research project report to the bellow address.

**Address**
The Under Secretary (FD-III)
University Grants Commission
Bahadur Shah Zafar Marg
New Delhi – 110 002.

Thanking you

Yours faithfully

10 **OBJECTIVES OF THE PROJECT:**

தமிழினம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால வரலாற்று பண்பாட்டு, மரபுகள் கொண்டது. காடுகளில் உணவுத்தேடல், வேட்டைச் சமூகம் இனக்குழு, வேளாண்குடிகள், திணை என்னும் ஒழுக்கம் சார்ந்து குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல், பாலை என ஐவகை நிலப்பரப்பில் இயற்கையுடன் இணைந்து வாழ்ந்து வளர்ந்த நிலை எனப் பரிணாமங்கள் கொண்ட மனித சமூகம், இயற்கை நிகழ்வுகளினால் அச்ச உணர்வும் தற்செயல்பாடுகளால் குற்ற உணர்வும் எழுந்த சூழல்களில் வழிபாடு என்பது தோன்றலாயிற்று. இவ்வழிபாடு இயற்கை வழிபாடு, முன்னோர் வழிபாடு தெய்வவழிபாடு எனப் பிரிந்தன. ஆகம விதிகளுக்கு உட்பட்டு தெய்வத் திருவுருவங்கள் சமைப்பதிலும் திருக்கோயில்கள் கட்டுவதிலும் பல்லவர், பாண்டியர். சோழர், நாயக்கர், மராட்டியர் நகரத்தார் காலப் பணிகள் எனப் பல வடிவங்கள் கலையம்சங்களுடன் காலத்திற்கேற்ப உருவாயின. இத்திருக்கோயில்களில் நாள் வழிபாடுகளும் மாத, ஆண்டு விழாக்களும். பெருந்திருவிழாக்களும் தோன்றி சமூக ஒற்றமைக்கு வித்திட்டன. மக்கள் அவ்வப்பகுதி விழாக்களில் சாமி தூக்குதல், சாமி ஆடுதல், தேர் இழுத்தல், திருப்பணிகள் செய்தல், பூ இறங்குதல். காவடி தூக்குதல் எனத் தமது பங்களிப்பினை வழங்கி இறையருள் பெற்று மகிழ்ந்தும் அமைதியுடனும் வாழ்ந்து வந்துள்ளனர்.

தொழில்களால் உருவான சாதிகளைக் காலநிலையில் கீழ், மேல் எனப் பிரித்து மக்களைப் பிரித்தாள முற்பட்ட சிலர் சாதிய உணர்வுகளைத் தூண்டி சமூகத்திலும், திருக்கோயில்களின் வழிபாடுகளிலும், திருவிழாக்களிலும் குழப்பங்களை விளைவித்து சமூக அமைதிக்குக் குந்தகம் ஏற்படுத்தியுள்ளனர். இப்பிரிவினைப் பாகுபாடுகள் தெய்வ வழிபாட்டிலும் புகுந்து மரியாதை பெறுதல், வழிபாட்டில் உரிமைகோரல், பங்கீடு, மண்டகப்படி, பங்காளி, இன, சாதிய உரிமை என்னும் காரணங்களால் குழப்பங்களை விளைவித்துக் கொண்டிருக்கின்றன. படித்து, கல்வியறிவில் மேம்பட்டு வரும் காலக்கட்டங்களிலும் சாதிகள், மதங்கள் வட்டார உணர்வுகளால் வழிபாட்டில், உரிமையைப் பெறுதலில் மோதல்கள் தோன்றி, குழப்பங்களும் அமைதியின்மையும், உயிரிழப்புகளும், பொருள் இழப்புக்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் சூழல்களில் சமூக நல்லிணக்கம், மத ஒற்றுமை, இன ஒற்றுமை அமைதி, வளர்ச்சி நிலைகளைக் கருத்தில் கொண்டு இவ்வாய்வு நிகழ்த்தப்பெறுகிறது.

**WHETHER OBJECTIVES WERE ACHIEVED (GIVE DETAILS)**

- சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டத்திலுள்ள சிற்றூர்கள் பலவற்றிற்கும் அங்குள்ள திருக்கோயில்களுக்கும் சென்று கள ஆய்வு வழிக் கீழ்க்கண்ட தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.
- இவ்வட்டத்திலுள்ள சிற்றூர்களில் வாழும் பல இனத்தவர்களிடமிருந்து நேர்காணல் வாயிலாகவும் வினாநிரல்கள் கொடுக்கப்பட்டும் தகவல்கள் சேகரிக்கப் பெற்றுள்ளன.
- ஆய்வுக்களத்திலுள்ள ஊர்களில் முக்கியமானவர்களிடமும், பிரச்சினைகளுக்குரிய

திருக்கோயில்களில் நிகழ்ந்த திருவிழாக்களில் பங்கு கொண்டும் நேரிடையாக நிகழ்வுகளைக் கண்டவர்களிடம் இருந்து எழுத்து வடிவக் குறிப்புகள் பெறப்பெற்றுள்ளன.

- பல இனத்தவர்கள் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.
- திருவிழாக்கள், வழிபாடுகளில் நிகழ்ந்த விரும்பத்தகாத சம்பவங்களில் பாதிக்கப்பட்டோர் முறையிட்ட நிலைகளில் நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புகளின் நகல்கள் பெறப்பட்டுள்ளன.
- சாதியத்தலைவர்கள், அரசியல் கட்சிகள் காவல் துறையினர் செயல்பாடுகள், குறித்த வரிவடிவச் சான்றுகள் திரட்டப்பெற்றுள்ளன.
- தமிழ், ஆங்கிலச் செய்தித்தாள்கள், பல்வேறு இதழ்களில் ஆய்வுத் தலைப்புத் தொடர்பாக வெளிவந்துள்ள தகவல்கள் முதலியன சேகரிக்கப் பெற்று ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- நிகழ்ந்த நிகழ்ச்சிகள் தொடர்பாக அரசு, நீதிமன்றம், அரசியல் சாதியத் தலைவர்களின் நடவடிக்கைகள் குறித்துத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சமூக அமைப்புக்கள் வெளியிட்டுள்ள கருத்துச் சாரங்கள் கிடைத்து தொகுக்கப்பட்டுள்ளது.
- ஆய்வுத் தொடர்புடைய நூல்கள், ஆய்வேடுகள், இதழ்கள் மற்றும் கட்டுரைகள் உற்றுநோக்கப் பெற்று மேற்கோள்கள் குறிப்பு அட்டைகள் கொண்டு எடுக்கப்பட்டுள்ளன.
- களத்தில் மேலும் தகவல்கள் பெறப்பட்டு அமையம் ஆய்வுக்கு உட்படுத்தப்பெற்றுள்ளது.
- ஆய்வின் முடிவில் பெறப்பட்ட தகவல்கள் உற்றுநோக்கப்பெற்று, மேற்கோள்களுடன் காரண காரியத்துடன் நடுவுநிலையில் விவாதிக்கப் பெற்றும் சான்றோர்கள் கருத்துக்களின் வழியும் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் காணப்பட்டுள்ளன.

## ACHIEVEMENTS FROM THE PROJECT

**கண்டதேவி கோவிலும் - நீதிமன்றத்தீர்ப்பு புறக்கணிப்பும்**

சிவகங்கை மாவட்டத் தேவஸ்தானத்தில் 108 கோயில்கள் உள்ளன. அந்த 108 கோயில்களும் 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அதில் தேவகோட்டை வட்டத்திலுள்ள திருக்கோயில் வழிபாடுகளில் நடக்கும் திருவிழாக்களில் (தாழ்த்தப்பட்டோருக்கு) அட்டவணை இன மக்களுக்கான உரிமைகளும் சலுகைகளும் காலம், காலமாக மறுக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயில், திருவிழாக்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் கோவிலுக்குள் செல்ல இயலாது. தேர்வடம் பிடிக்க அனுமதி கிடையாது. மேலும் வழிபாட்டில் உரிமை, விழாவில் பங்கீடு இன மக்களுக்கான மண்டகப்படி, விழாவில் அனைவருக்குமான மரியாதை பெறுதல் என அனைத்தும் சாதிய ஆதிக்கவாதிகளால் முற்றிலும் அனுமதி மறுக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்டோருக்குக் கோவில் திருவிழாக்களில் எவ்வித உரிமையும் அளிக்க மாட்டோம் என்று தேவகோட்டை வட்டத்தில் உள்ள ஒரு சில சமுதாயத்தினர் (சாதி இந்துக்கள்) அறிவித்துள்ளனர். இது சமூக நீதிக்கு எதிரானது; அரசுக்குச் சொந்தமான அந்த கோவில் திருவிழாக்களில் அனைத்து

சமுதாயத்தினரும் பங்கேற்பது என்பதுதான் நியாயமானது. ஆனால், சிவகங்கை மாவட்டத்தில் குறிப்பாக தேவகோட்டை வட்டப் பகுதியில் தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான இதுபோன்ற அநீதிகள் காலங்காலமாக நடந்து கொண்டிருக்கின்றன. இதை எதிர்த்து உரிமைக்காகக் குரல் கொடுத்த தாழ்த்தப்பட்டவர்கள் பலர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இப்போதும் இந்த பிரச்சனையில் தலித் மக்களின் முக்கிய பிரமுகர்களை அதிகாரிகள் அழைத்துச் சென்று கோவில் விழாவில் வடம் பிடிக்க மாட்டோம். உரிமை கொண்டாட மாட்டோம் என்று வற்புறுத்தி எழுதி வாங்கியுள்ளனர். இது அரசுக்கு தெரிந்துதான் நடந்துள்ளதா? என்பது புரியாத புதிராக உள்ளது. இந்தப் பகுதியில் வசிக்கும் பெரும்பான்மை இனத்தவர்கள் தாங்கள் வைத்தது தான் சட்டம் என்று வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்களின் செயல்பாட்டில் சட்டம் கூட தலையிட முடிவதில்லை.

**சித்ரவதைக்கு எதிரான ஐ.நாவின் பிரகடனம்:**

- ஒவ்வொரு அரசும் தனது சட்ட ஆளுகைக்குட்பட்ட எந்தப் பகுதியிலும் சித்ரவதை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று நம்பத்தகுந்த போதுமான காரணங்கள் இருந்தால் அங்கு தகுதி பெற்ற அதிகாரிகளைக் கொண்டு ஒரு முறையான பாரபட்சமில்லாத விசாரணை மேற்கொள்வதை உறுதிப்படுத்த வேண்டும். (பிரிவு 12).
- ஒவ்வொரு அரசும் தனது ஆளுகைக்குட்பட்ட எந்த பகுதியிலும் எந்த தனிநபரும் தான் சித்ரவதை செய்யப்பட்டதாகக் கூறும் பட்சத்தில் அவர் புகார் செய்வதற்காகவும் மற்றும் தனது வழக்கை தகுதி பெற்ற அதிகாரிகளால் நியாயமாகவும், பாரபட்சமின்றியும் விசாரனை செய்வதற்கு உரிமை அளிக்க உத்திரவாதம் செய்ய வேண்டும். அவர் புகார் அளித்ததன் அல்லது சாட்சியம் அளித்ததன் விளைவாக மோசமாகவோ அல்லது அச்சுறுத்தவோ படாமலிருக்கப் புகார் அளிப்பவரும், சாட்சியம் அளிப்பவரும் பாதுகாக்கப்பட்ட முறையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.(பிரிவு -13)
- சித்ரவதை நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டவருக்கு நீதி வழங்கப்படுவதையும், முழுமையான மறுவாழ்வு அளிக்கப்படுவது உள்ளிட்ட அவர் நியாயமான போதுமான நஷ்டஈடு பெறுவதற்கான உரிமையையும் அளிப்பதாக சட்ட அமைப்பு இருப்பதை ஒவ்வொரு அரசும் உத்திரவாதம் செய்ய வேண்டும். சித்திரவதையினால் அவர் இறக்க நேரிட்டால், அவரை சார்ந்திருப்பவர்களுக்கு நஷ்டஈடு அளிக்கப்பட வேண்டும். (பிரிவு -14)

இந்திய அரசியல் சாசனத்தில் சமத்துவம் மற்றும் தீண்டாமை ஒழிப்பு பற்றிப் பேசும் அடிப்படை உரிமைகள்

- சட்டத்தின் முன் அனைவரும் சமம் சட்டங்களின் மூலம் அனைவருக்கம் சமபாதுகாப்பு (பிரிவு -14)
- சமயம், இனம், சாதி, பால் பிறப்பிடம் ஆகியவற்றைக் காரணமாகக் கொண்டு அரசு பாகுபாடு காட்டக்கூடாது.(பிரிவு -15)

- தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது. எந்த வடிவத்தில் தீண்டாமை கடைப்பிடிக்கப்பட்டாலும் குற்றம். (பிரிவு -17).

ஐநாவின் சட்டப் பிரிவாக இருப்பினும், இந்திய அரசியல் சாசனத்தின் அடிப்படை உரிமையாக இருப்பினும் பட்டியலின மக்களுக்கோ இச்சட்ட விதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படாமல் தீண்டாமை பல்வேறு வடிவங்களில் இன்னும் திணிக்கப்படுகிறது. தேவகோட்டை வட்டத்தில் பல்வேறு கோவில்களில் தீண்டாமைக் கொடுமையும், பாகுபாடும் நிலவி வருவது உண்மையாக இருக்கிறது. அவற்றுள் தீண்டாமையின் உச்ச கட்டமாக கண்டதேவி கோவிலில் நடைபெற்ற செயலினை ஈண்டு விளக்கிக்கூற வாய்ப்புண்டு.

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், ஆறாவயல் காவல் நிலைய எல்லைக்குட்பட்டது கண்டதேவி பஞ்சாயத்து. தேவகோட்டையிலிருந்து 3.கீ.மீ தொலைவில் உள்ள கண்டதேவி கிராமத்தில் கள்ளர்கள்(200 குடும்பம்), நாடார்கள் (25 குடும்பம்), வலையர்(10குடும்பம்) பள்ளர் (30 குடும்பம்), பறையர் (7 குடும்பம்) உள்ளிட்ட சமூக மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இக் கிராமத்தில் அரசியல் பொருளாதார விஷயங்களில் முடிவெடுக்கும் ஆளுகை உள்ளிட்ட அனைத்து அதிகாரங்களையும் தீர்மானிக்கும் சக்தியாக கள்ளர்கள் உள்ளனர்.

கண்டதேவி பஞ்சாயத்து கீழசெம்பன்மாரி, மன்னன்வயல், செட்டியவயல், சிறுமருதூர், முல்லிக்குண்டு, தாளையூர் உள்ளிட்ட பல்வேறு சிற்றூர்களை உள்ளடக்கியது. இது தாழ்த்தப்பட்ட தலித் மக்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட தனித் தொகுதியாகும்.

பஞ்சாயத்து அளவில் மக்கள் தொகையைக் கணக்கிட்டுப் பார்த்தால் பள்ளர், பறையர், சமூகத்து மக்களான தலித்துகள் 60 சதவிகித அளவில் உள்ளனர். மேலனை செம்பொன்மாரி நாடு (22.5 கிராமங்களைக் கொண்டது) உஞ்சனை நாடு (32.5 கிராமங்களைக் கொண்டது) தென்னிலை நாடு (96.5 கிராமங்களைக் கொண்டது) ஆகிய நான்கு முக்கிய 'நாடுகளைக்' உள்ளடக்கியது. கடந்த காலத்தில் கண்டதேவி சொர்ணமூர்த்தி ஈஸ்வரர் கோவிலைச் சுற்றியுள்ள பகுதியில் பெரும்பான்மைச் சமூகமாக தலித் மக்கள் இப்பகுதியில் வசித்து வருவதனாலும் 1910 முதல் தலித்துகள் மனித உரிமைகளுக்காககப் போராடி வருவதாலும், கொடூரமான தீண்டாமை வடிவங்கள் கடைப்பிடிக்க முடியவில்லை. ஆனால் வழிபாடு, அரசியல் நடவடிக்கை, சமூக மேம்பாடு போன்ற பல்வேறு தளங்களில் மறைமுகமான தீண்டாமைக் கொடுமைகளும், பாகுபாடுகளும் இங்கு நிலவி வருவதுதான் உண்மையாக இருக்கிறது. இதன் வெளிப்பாடாகத்தான் தேர்திருவிழாவில் தலித்துக்களைச் சாதிய இந்துக்கள் வடம்பிடிக்க அனுமதிப்பதில்லை.

**சாதிய இந்துக்களின் வன்மமும் தலித் மக்களின் போராட்டமும்**

தேவகோட்டை வட்டத்தில் அனைத்து மக்களும், ஒன்றாகக் கூடிச் சாதி பாகுபாடின்றி ஊர் கூடி தேர் இழுத்த வரலாறு உண்டு. 1979 இல் உஞ்சனை கிராமத்தில் உள்ள அய்யனார்

கோவில் புரவி எடுப்பில் தலித் மக்களுக்கும், கள்ளர் சமுதாய மக்களுக்கும் மோதல் ஏற்பட்டது. கலவரத்தில் 5 தலித்துகள் படுகொலை செய்யப்பட்டனர். இத்துயரச் செயலால் 1979 ஆம் ஆண்டு முதல் தலித் மக்கள் கண்டதேவி தேரோட்டத்தில் பங்கு பெறவில்லை.

இதனை அடுத்து 1997 இல், ஒரு பட்டியலினத்தைச் சார்ந்த ஒருவர் கண்டதேவியில் தேர்வடம் பிடிக்க முயற்சித்த போது, ஒரு சில கள்ளர் சமூக இளைஞர்களால் அவர் கடுமையாகத் தாக்கிக் காயப்படுத்தப்பட்டார். இக்கொடூர தாக்குதலால் தலித் மக்கள் வெகுண்டெழுந்து ஓர் அணியாய் ஒன்று சேர்ந்து, தலித் மக்கள் தேர்வடம் பிடிக்கும் உரிமை திடீரென்று மறுக்கப்பட்டதேன்? எனக் கேள்வி எழுப்பினர்.

இக்காலகட்டத்தில் தான், புதிய தமிழகம் கட்சி நிறுவனர் டாக்டர் கிருஷ்ணசாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் 1998 ஆம் ஆண்டு ரிட் மனு தாக்கல் செய்தார். 24.6.1999 இல் தீர்பு வெளியானது. 'அனைத்து மக்களும் தேர்வடம் பிடிக்கலாம். தேர்வடம் பிடிக்க மாவட்ட நிர்வாகம் பாதுகாப்பு வழங்க வேண்டும். உள்ளூர் நிலைமைகளுக்குகேற்ப சட்ட ஒழுங்கு பராமரிக்கப்பட வேண்டும்' என நீதிமன்றம் ஆணையிட்டது.

தீண்டாமை எண்ணம் கொண்ட, ஒரு சில கள்ளர்களின் நடவடிக்கையால் தலித் மக்கள் தேர்வடம் பிடிக்க மறுக்கப்பட்டதோடு தேர்வடமும் ஓடவில்லை. அரசும் தேரோட்டத்தை தடை செய்தது. அடுத்தடுத்த ஆண்டுகளிலும் இதே தொடர் நிலைமைதான். 2003 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சியரால் அனைவரும் தேர்வடம் பிடிக்கலாம் என்ற அறிவிப்பிற்குப் பின்னும் தலித் மக்களை தேர்வடம் பிடிக்கவிடாமல் கள்ளர் சமூக மக்கள் ஆக்கிரமிப்பு செய்து, அவர்கள் மட்டுமே தேர்வடம் பிடித்து தேரோட்டம் நடத்தினர். 2005, 2006 ஆம் ஆண்டுகளில் அடையாளமாக பட்டியலின மக்கள் 10 பேர் மற்றும் 26 பேர் என பங்கு பெறவைத்து, நீதிமன்ற ஆனையை நிறைவேற்றியதாக அரசு பதிவு செய்து கொண்டது.

கண்டதேவியில் உள்ள சொர்ணமூர்த்தி ஈஸ்வரர் கோவில் பழமையான மரபினைக் கொண்டது. 1940-களுக்கு முன்னர் இக்கோவிலின் தேர்த்திருவிழாவில் தலித்துகளும், நாடார்களும், கள்ளர்களும் பங்கு பெற்று இருக்கின்றனர். அன்றைய நிலையில் தேர் இழுப்பது என்பது சாதாரண காரியம் அல்ல. பெருந்திரள் மக்களைச் சேர்த்து இழுத்ததால்தான் வலம்வர இயலும். 1940களுக்கு பின்னர் கள்ளர்கள் தலித்துகளைச் சாதிய ரீதியாகப் பாகுபாடு காட்டி நீங்கள் தேர் இழுக்கக் கூடாது. இது கள்ளர்களின் திருவிழா' என்றெல்லாம் கூறியிருக்கின்றனர். அன்று முதல் இன்று வரை தீண்டாமை என்பது நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருக்கிறது.

"தீண்டாமை ஒரு பாவச்செயல்
தீண்டாமை ஒரு பெருங்குற்றம்
தீண்டாமை மனிதத்தன்மையற்ற செயல்"

இந்திய அரசியல் சட்டமானது பல்வேறு சாசனப் பிரிவுகளைக் கொண்டு அமைந்திருந்தாலும் கண்டதேவி பிரச்சினையானது 1997 முதல் இது பல பரிமாணங்களைக் கொண்டு வளர்ந்து வந்திருக்கிறது. கடந்த காலங்களில் தலித்துகளுக்கும் சொர்ணமூர்தீஸ்வரர்

தேர்த்திருவிழாவில் வடம் பிடிக்கும் உரிமை இருந்திருக்கிறது. அதை சாதிய இந்துக்கள் மறைத்து விட்டனர். இனி நம்முடைய வழிபாட்டு வடம் பிடிக்கும் உரிமையை விட்டுக் கொடுக்க கூடாது என்று முடிவெடுக்கின்றனர்.

இந்த முடிவின் தொடக்கமாக கடந்த 1997 ஆம் ஆண்டு தேவகோட்டை நகர், கீழக்குடியிருப்பைச் சேர்ந்த இளைஞர் செந்தில்குமார் த.பெ.சேகரன் துணிந்து சொர்ணமூர்த்தீஸ்வரர் தேர்த்திருவிழாவில் வடம் பிடிக்க முயற்சி செய்திருக்கிறார். அவரைச் சாதிய இந்துக்கள் வடம் பிடிக்க அனுமதி மறுத்ததோடு மட்டுமல்லாமல், சாதி வெறியோடு அடித்தும் கீழ்த்தர வார்த்தைகளால் திட்டியும் விரட்டியுள்ளனர். இப்பிரச்சினை தொடர்பாக, கடந்த 1998 ஆம் வருடம் சென்னை உயர்நீதிமன்றத்தில் தேர் வடம் பிடிக்க, தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கும் உரிமை வேண்டும் என்று புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர்.கிருஷ்ணசாமி அவர்கள், ரிட் மனு ஒன்றினை தாக்கல் செய்தார். 24.06.1999 அன்று சென்னை உயர்நீதிமன்றமும் "அனைத்து இந்துக்களும் தேர்வடம் பிடிக்கலாம் என்றும் நாட்டார்களுக்குரிய மரியாதைகள் வடம் இழுப்பதற்கு முன்னர் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் தமது தீர்ப்பினை (Ap.P.No.15/99D2) வழங்கியது.

இதனிடையே கடந்த 1998 ஆம் ஆண்டு வழக்கு நிலுவையில் இருக்கும் போது சாதிய இந்துக்கள் தேர்வடம் பிடிக்கத் தலித்துகளை அனுமதிக்கக் கூடாது என்று கூறியதாலும், தலித்துக்கள் நாங்கள் வடம் பிடிப்போம் என்று கூறியதாலும் சாதிய மோதல்கள் ஏதேனும் நடந்து விடக்கூடாது என்பதற்காக, தமிழக அரசு 1998ஆம் ஆண்டு கோவில் தேர்வடம் பிடிக்கும் நாளன்று 144 தடை உத்தரவினை விதித்திருந்தது. இதுதான் கடந்த ஆறு வருடங்களாக வடம் பிடிக்கும் உரிமை தலித் மக்களுக்கு மறுக்கப்பட்டு வந்துள்ளது. சட்டத்தின் முன் அனைவரும் சமம், சட்டங்களின் மூலம் அனைவருக்கும் சம பாதுகாப்பு என்று இந்திய அரசியல் சாசனத்தில் சமத்துவம் மற்றும் தீண்டாமை ஒழிப்பு குறித்துப் பேசும் 14ல் கூறப்பட்டுள்ளது. இனப்பாகுபாடு ஒழிப்பு பற்றிய அகில உலக உடன்படிக்கையில் பிரிவு2(1)இல் இன ஒதுக்கலை மேற்கொள்ளும் மனிதரையும் குழுக்களையும் அமைப்புகளையும் எல்லா வழிமுறைகளையும் சட்டங்களையும் பயன்படுத்தி தடுக்கவும் அவற்றை முடிவிற்குக் கொண்டு வரவும் ஒவ்வொரு நாடும் முனைய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த உரிமைகள் கண்டதேவி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதி தலித் மக்களுக்கு கிடைத்து இருக்கிறதா? என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை. நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினைக் கடைபிடிக்கும் பொறுப்பு, நடைமுறையில் சாதிய இந்துகளுக்கு இல்லை. அதுபோல, இந்தத் தீர்ப்பின் சாராம்சத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்புகள் அரசு இயந்திரத்துக்கு இல்லை. இதனிடையே உரிமை மறுக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டுள்ள தலித்துக்களுக்கும் உரிய சட்டப்பாதுகாப்பு இல்லை என்பதை அறிய முடிகிறது. எனவே சாதி எதிர்ப்பு போராட்டத்தை மதச் சார்பின் அடிப்படையிலோ, சாதி அடிப்படையிலோ வெறும் அறிவு, விழிப்புணர்வு மூலமாகவோ இறுதி வரை நடத்த முடியாது.

**சாதிய இந்துக்களின் பாகுபாடும் அரசு இயந்திரத்தின் பாரபட்சமும்:**

கடந்த 1998ஆம் ஆண்டு முதல் கண்டதேவி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதி தலித் மக்கள் சொர்ணமூர்தீஸ்வரர் தேர்த்திருவிழாவின் போது, வடம்பிடிக்கும் உரிமை தலித்துகளுக்கும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலுவாக அழுத்தமாக முன்வைத்து வருகின்றனர். இதனால் மாவட்ட நிர்வாகமும், காவல் துறையும் கள்ளர் சமூகத்துப் பெரியோர்களையும், தலித் சமூகத்துத் தலைவர்களையும் அழைத்துப் பலமுறை பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வந்திருக்கின்றனர். இந்தப் பேச்சுவார்த்தைகளில் சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர், தேவகோட்டை கோட்டாட்சியர், டி.ஐ.ஜி பங்கேற்றுள்ளனர். சாதிய இந்துக்களின் பிரதிநிதிகள் நாங்கள் மட்டும் வடம் பிடிப்போம் பள்ளர்-பறையர்களை அனுமதிக்க மாட்டோம் என்று கூறி வந்திருக்கின்றனர். தலித்துக்கள் பிரதிநிதிகள் நாங்களும் வடம் பிடிப்போம் என்று தொடர்ந்து கூறி வந்திருக்கின்றனர்.

இதனால் கடந்த 1998,1999,2000,2001 ஆகிய நான்கு ஆண்டுகளும் தேர் இழுக்கப்படும் அன்று அரசு அப்பகுதியில் 144 தடை உத்தரவினைப் போட்டு வந்திருக்கிறது. இந்த நான்கு ஆண்டுகளும் தேர்த்திருவிழா மட்டும் ரத்து செய்யப்பட்டுள்ளது. தலித் மக்களை சமூகத்தின் மைய நீரோட்டத்தில் இணைப்பதற்கான Affirmative action அரசியல், சமூக, பொருளாதார அதிகாரம் போன்றவை அரசால் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் கடந்த நான்கு வருடங்களாக பேச்சுவார்த்தையில் சமூக உடன்பாடு ஏற்படவில்லை. அதனால் 144 தடை உத்தரவு போட்டு இருப்பதாக மாவட்ட நிர்வாகம் கூறி வந்திருப்பது சட்டரீதியாகவும் நியாயமாகவம் ஏற்புடையதாகவும் இல்லை. "தீண்டாமை ஒழிப்பு சிவில் உரிமைப் பாதுகாப்புச் சட்டம்(PCR Act) இருந்தது. அந்தச் சட்டத்தின் கீழ் தீண்டாமைதான் பாதுகாப்பாக இருந்தது. பிறகு அந்த சட்டத்திற்குப் 'பல் இல்லை' என்று கண்டு பிடித்தார்கள். பிறகு வன்கொடுமைத் தடுப்புச்சட்டம் (1989) கொண்டு வரப்பட்டது. அப்படி ஒரு சட்டம் வந்திருப்பதே தெரியாமல் அரசும் ஆளும் வர்க்கமும் அதன் வாயைத் தைத்து விட்டன.

நீதிமன்ற உத்தரவினை யார் அவமதிக்கிறார்களோ, அரசியல் உரிமைச் சாசனத்தை யார் மீறுகிறார்களோ, அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதுதானே அரசு இயந்திரத்தின் வேலை? அதை விட்டு விட்டு, மீறுகிறவர்களுக்கு அரசு இயந்திரம் துணை போவது வேண்டும் என்றே தம்முடைய கடமைகளைப் புறக்கணிக்கும் நடவடிக்கையாகும். தலித் மக்களைச் சமூகத்தின் மைய நீரோட்டத்தில் இணைப்பதற்காக என்ன என்ன முயற்சிகளை மாவட்ட நிர்வாகமோ காவல்துறையினரோ எடுத்து இருக்கிறார்கள் என்று பார்த்தால், எவ்வித பணியினையும் செயல்படுத்தவில்லை என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

"தலித்துக்களை சமமாக வடம்பிடிக்க அனுமதிக்க மாட்டோம் என்று கூறிய சாதிய இந்துக்களின் மீது, அரசு இயந்திரம் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? குறைந்தபட்சம் முதல்

தகவல் அறிக்கை கூட ஏன் பதிவு செய்யப்படவில்லை."5 என்பதையும் அரசிற்கும் சிவில் சமூக அமைப்புகளுக்கும் மக்களுக்கும் கவனப்படுத்துகிறோம்.

## அரசு இயந்திரத்தின் துரோகமும் ஏமாற்றப்பட்ட தலித் மக்களும்:

கடந்த 24.06.2002 அன்று கண்டதேவித் தேர்த்திருவிழா நடைபெற்றது. வழக்கம்போல, முன்னதாக சாதிய இந்துச் சமூகப் பெரியோர்களையும், தலித் தலைவர்களையும் அழைத்து மாவட்ட ஆட்சித்தலைவரும் காவல்துறை கண்காணிப்பாளரும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கின்றனர். அப்போது சுமூகமான உடன்படிக்கை ஏற்பட்டு இருக்கிறது. இரண்டு தரப்பினரும் முழுமையாக ஏற்றுக்கொண்ட உடன்படிக்கை தலித்துக்கள் திருவிழாவின்போது தேர்வடம் பிடிக்கலாம் என்கிற உடன்படிக்கை.

இதன் அடிப்படையில் 24.06.2002 அன்று பெரும்பாலான தலித்துக்கள் தேர் வடம் பிடிப்பதற்காக கண்டதேவிக் கோவிலுக்குத் திரண்டு இருக்கின்றனர். அப்போது போலீசார் தலித் சமூக மக்களைத் தனியாகத் தடுத்து நிறுத்தி, தடுப்பு அமைத்து உங்களை நிச்சயம் அனுமதிப்போம் கூட்டம் நிறைய இருக்கிறது. பொறுமையாக இருங்கள் ஏதும் பிரச்சினை வந்து விடக்கூடாது என்பதற்காகத் தடுத்து நிறுத்தியிருக்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள். இதில் கொடுமை என்னவென்றால் 50க்கும் மேற்பட்ட போலீசார் சிவில் உடையணிந்து தலித்துக்களைப் போல் அவர்களோடு ஒன்றாக நின்று கொண்டது மட்டுமல்லாமல் - இந்த போலீசார் 'தடுப்புக்கு' முன்பாக நின்று கொண்டு தலித் மக்களை உள்ளே செல்லாமல் தடுத்து இருக்கின்றனர்.

சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அனைத்து இந்துக்களும் தேர்வடம் பிடிக்கலாம் என்று அறிவித்தவுடன் சாதிய இந்துக்கள்(ஆண்களும், பெண்களும்) வேகமாக ஓடிச்சென்று தேர்வடத்தைப் பிடித்து இழுத்து இருக்கின்றனர். பின்னர் சிறிது நேரம் கழித்தே தலித் மக்கள் பகுதியில் பணியிலிருந்த காவலர்கள் தலித் மக்கள் நெருக்கித் நெருக்கித் தள்ளியதால் காவலர்கள் விலகிக்கொள்ள ஓரிரு தலித்துக்கள் மட்டும் வடம் பிடிக்க முடிந்தது. அப்போதும் கூட சாதி, இந்துக்கள், தேர்வடம் பிடித்த சில தலித்துக்களையும் அடித்து உதைத்து வெளியே தள்ளியுள்ளனர். இச்சம்பவத்ததை பல்வேறு தலித் மக்கள் எதிர்த்துக் குரல் கொடுத்துள்ளனர். 'தாங்கள் அப்போது வஞ்சிக்கப்பட்டும், இப்போது ஏமாற்றப்பட்டும் உள்ளோம்" என்பது அவர்கள் கருத்து.

இனப்பாகுபாடு ஒழிப்பு பற்றிய அகில உலக உடன்படிக்கை பிரிவு 3-இல் பண்பாட்டுச் செயல்பாடுகளில் சமபங்கேற்பதற்காக உரிமை வழங்கப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது. பண்பாட்டுச் செயல்பாடு உரிமை – ஒதுக்குதல் தலித்துகளுக்கு எதிராகவும், சாதிய இந்துக்களுக்கு ஆதரவாகவும் ஈடுபட்ட அரசு அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டால்தான் மனித உரிமைகள் மீதும் அவற்றை நிறைவேற்றக்கூடிய அமைப்புகள் மீதும் மக்களுக்கு நம்பிக்கை வரும் என்பதை மறுபடியும் இங்கே கவனப்படுத்துகிறோம்.

சாதிய இந்துக்களின் வன்மமும் அரசின் முறையற்ற சட்டவிரோத நடவடிக்கையும்

கண்டதேவி சொர்ணமூர்தீஸ்வரர் தேர்த்திருவிழா 11.07.2003 அன்று அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில் கடந்த 29.06.2003 அன்று மனித உரிமைக் கூட்டமைப்பின் தலைவர் டாக்டர்.எம்.சுப்பிரமணியன் அவர்கள் சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பியிருக்கிறார். அதில் கடந்த 24.06.2002 அன்று நடைபெற்ற தேர்த்திருவிழாவின் போது தலித் மக்கள் ஏமாற்றப்பட்டு விட்டனர். அதே போன்ற நிலை இவ்வருடமும் நடக்கக் கூடாது. ஆகவே தலித் சமூகத்து மக்கள் 50 பேர், கள்ளர் இன மக்கள் 50 பேர் பின இன மக்கள் 50 பேர் ஆக 150 பேரையும் மாவட்ட ஆட்சித்தலைவர் மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் ஆகியோரது தலைமையிலும், பாதுகாப்புடனும் வெளிப்படையாக அழைத்துச் சென்று அனைவரும் இணைந்து தேர்வடம் பிடித்து இழுக்க வகை செய்ய வேண்டும என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். அப்போது மாவட்ட ஆட்சித்தலைவராக திரு.சந்தோஷ்பாபு அவர்களும், மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளராக திரு.அபின் தினேஷ் மோடாக் அவர்களும் இருந்துள்ளனர். இது நல்ல ஆலோசனை என்று மாவட்ட நிர்வாகமும் காவல் துறையும் ஏற்றுக் கொண்டது.

இந்நிலையில் கடந்த 11.07.2003 அன்று நடைபெற்ற திருவிழாவின் போது மாவட்ட ஆட்சித்தலைவரும், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் அவர்களும் இரண்டு தரப்பினரிடமும் இருந்து தலித்துக்கள் 10 பேராகவும், நாட்டார்கள் 10 பேராகவும் வடம் பிடிக்க வேண்டும் என்று கூறியிருக்கின்றார். அதற்கு சாதிய இந்துக்கள் முடியாது என்று மறுப்புத் தெரிவித்து இருக்கின்றனர். இதனால் மாவட்ட ஆட்சித்தலைவரும் மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் அவர்களும் நாங்கள் நீதிமன்ற உத்தரவினைக் கடைப்பிடிக்க விரும்புகிறோம் தயவு செய்து நாங்கள் கூறுவதைக் கேளுங்கள் நீதிமன்றம் என்ன உத்தரவு போட்டு இருக்கிறதோ, அதைத்தான் நாங்கள் பின்பற்ற முடியும் என்று கூறியிருக்கின்றனர். அதற்கு சாதிய இந்துக்கள் அதெல்லாம் முடியாது. தலித்துக்களை அனுமதிக்க மாட்டோம் இல்லை என்றால் நாங்கள் இந்த திருவிழாவைப் புறக்கணிப்புச் செய்வோம் என்று கூறியிருக்னின்றனர். அதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் அவர்களும் நீங்கள் புறக்கணிப்புச் செய்வதற்கு நாங்கள் பொறுப்பாக இருக்க முடியாது. இங்கே இருப்பவர்களைக் கொண்டு தேர்வடம் பிடிக்கப்படும் என்று கூறியிருக்கின்றனர். அதற்கு சாதிய இந்துக்கள் குறிப்பாக 50 பெண்கள் நீங்கள் அப்படி செய்தால் தேர்ச் சக்கரத்தில் விழுந்து இறந்து போவோம் என்று கூறியிருக்கின்றனர். "பார்ப்பனிய சாதிப் படிநிலை அமைப்பின் ஆகக் கொடூரமான வடிவம்தான் தீண்டாமை. சாதி உணர்வின் மிக இழிந்த வெளிப்பாடுதான் தீண்டாமை. சாதியும், சாதி உணர்வும் அப்படியே நீடிக்கும் போது தீண்டாமையை மட்டும் தனியே ஒழிப்பது எப்படி? " 6 என்ற அம்பேத்காரின் வரிகளை மேற்கண்ட நிகழ்வோடு ஒப்பிட முடிகிறது. இதனிடையே சில சாதிய இந்துக்கள் மாவட்ட ஆட்சித்தலைவரையும், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளரையும்

பார்த்து, பள்ளனும் பறையனும் கலெக்டராகவும், எஸ்.பியாகவும் இருந்து கொண்டு, இங்கு உள்ள பள்ளனுக்கும், பறையனுக்கும் ஆதரவு தெரிவிக்கிறீர்களா? என்று சாதிய ரீதியாக இழிவுப்படுத்தித் திட்டியிருக்கின்றனர்." [7] இந்தப் பேச்சினைக் கண்டித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் தமக்கு நேர்ந்த அவமானத்தைப் புகாராக எழுதி. ஆறாவயல் காவல் நிலையத்தில் கொடுத்துவிட்டு வந்திருக்கிறார். பின்னர் அன்றும் தேர் இழுக்கப்படவில்லை. இந்நிலையில் மறுநாள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களையும், மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் அவர்களையும் தமிழக அரசு உடனடியாக இடமாற்றம் செய்தது.

அரசு இயந்திரத்தை சட்டரீதியாக செயல்பட விடாமல் தடுத்ததோடு, சாதிய ரீதியாகவும் இழிவுபடுத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் பாதிக்கப்பட்ட அதிகாரிகளையே இடமாற்றம் செய்த இந்த நடவடிக்கை மிகவும் கண்டனத்திற்குரியது. நீதிமன்ற உத்தரவினைக் கடைபிடிக்க முயன்றதற்காக மாவட்ட ஆட்சித்தலைவரையும், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளரையும் தமிழக அரசு மாற்றியது வன்ம நடவடிக்கை என்பதை இங்கே பதிவு செய்கிறோம். அதுமட்டுமல்ல முக்கிய நடவடிக்கைகளை செயல்படுத்தக் கூடிய அதிகாரிகள் தலித்துகளாக இருப்பதனால் அவர்களைச் சாதிய ரீதியாக இழிவாகப் பேசியது மிகுந்த கண்டனத்திற்குரியதாக அமைகின்றது.

"தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகள், பாதுகாக்கப்படுவதற்கான சட்ட விதிகள் இருந்தாலும் அவை நிர்வாகத் துறையினரால் சரியாக அமலாக்கப்படுவதில்லை மக்களிடமும் முறையாக விழிப்பணர்வும் ஏற்படவில்லை தலித் மக்கள் நீங்கலாக மற்ற மக்கள் பகுதியினரிடமும் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அக்கறையும் ஆதரவும் ஏற்படவில்லை. உரிமைககளையும் சட்ட உத்தரவுகளையும் வழிகாட்டுதல் மூலம் கடைபிடிக்கக் கூடிய அரசு அதிகாரிகள் மீது, நடவடிக்கை என்பது மிக மோசமான, கொடூரமான, சட்டவிரோத செயலாகும். அரசு இயந்திரங்களின் உரிமை சார்ந்த பணியினை முடக்குவது என்பதும் மனித உரிமை மீறலே என்பதை மக்களுக்கும் சிவில் சமூக அமைப்புகளுக்கும் அரசுக்கும் சுட்டிக்காட்டுவது கடமையாகிறது.

## தலித்தலைவர்கள் - வீட்டுக் காவலில் வைக்கப்படுதல்

கடந்த 01.7.2004 அன்று காலை 10.00மணியளவில் தேவகோட்டையில் உள்ள டாக்டரும், பி.எஸ்.பி கட்சியின் மாநிலத் துணைத்தலைவருமான திரு.ம.சுப்பிரமணியன் அவர்கள் வீட்டுக்கு முன்னால் இரண்டு போலீசார் சீருடை அணியாமல் அங்குள்ள கடை ஒன்றில் உட்கார்ந்திருந்தனர். அந்தப் போலீசார் டாக்டர்.ம.சுப்பிரமணியன் அவர்களிடத்தில் நீங்கள் எங்கும் வெளியே போகக்கூடாது; நீங்கள் எங்காவது செல்ல வேண்டுமென்றால் எங்களிடம் கூறிவிட்டுத்தான் செல்ல வேண்டும் என்று கூறியிருக்கின்றனர். டாக்டர்.சுப்பிரமணியன் அவர்கள் கண்டதேவித் தேர் இழுக்கும் பிரச்சினையில் தலித் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தவர். இவரைப்

போன்று மாலையிட்டான் வயல் என்கிற கிராமத்தில் இருந்த திரு.கருணாநிதி என்கிற வழுக்குரைஞரை அவர் தங்கியிருந்த மாலையிட்டான் வயல் கிராமத்தில் வைத்து வீட்டுக் காவலில் போலீசார் கண்காணித்தனர். இவர் தலித் சமூகத்து மக்களின் உரிமைகளுக்காக அமைப்பு ரீதியாகச் செயல்பட்டும், குரல் எழுப்பியும் வருபவர் ஆவார்.

**மறுபடியும் நடந்த துரோக நடவடிக்கைகள்:**

கண்டதேவிப் பஞ்சாயத்து தலைவரான திரு.கேசவமணி த.பெ.கருப்பையா என்பவர் பள்ளர் சமூகத்தைச் சார்ந்தவர். இவர் திரு.வெற்றிவேல், திரு.சீனி, திரு.கருணாநிதி, திரு.மு.ஆனந்த், திரு.கருப்பையா மற்றும் தம்முடைய பெயரையும் சேர்த்து மொத்தம் 10 பேர் கொண்ட தலித் சமூகத்து மக்கள் பட்டியலை மாவட்ட நிர்வாகத் துறையிடம் கொடுத்து இவர்கள் தான் இந்த வருடம் வடம் பிடிக்கப் போகும் தலித்துகள் என்று கூறியிருக்கிறார்.

இந்த நடவடிக்கை கண்டதேவி மற்றும் அதனை சுற்றியுள்ள தலித் மக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கிறது. இதனால் கடந்த 27.06.2004 அன்று பிற்பகலில் மாலையிட்டான் வயல் கிராமத்தில் 300, 350 தலித் சமூகத்து மக்கள் ஒன்று கூடிப் பஞ்சாயத்துத் தலைவர் திரு.கேசவமணி அவர்களை அழைத்து நீங்கள் எப்படிப் பெயர்ப் பட்டியல் கொடுக்கலாம்? நான்கு நாட்டைச் சேர்ந்த தலித்துகளையும் சேர்த்து பட்டியல் கொடுத்து இருக்கலாமே? 2002இல் நடந்தது போல் நாம் ஏமாந்துவிடக் கூடாது என்றெல்லாம் கூறியிருக்கின்றனர். அதற்கு திரு.கேசவமணி அவர்கள் நான் பட்டியலைக் கொடுத்தது – கொடுத்ததுதான் என்கிற ரீதியில் பேசியிருக்கிறார். "மவுனம் சாதிப்பவர்களும் சமரசம் பேசுபவர்களும், ஒதுக்கியிருப்பவர்களும், சாதி வெறியர்களின் நம்பிக்கையை மெய்ப்பிக்கிறார்கள். இதற்கு கேசவமணியம் ஒரு உதாரணமாகும்.

கடந்த 27.06.2004 அன்று இரவு 7.30 மணியளவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை சந்திப்பதற்காக தலித் சமூகத்துத் தலைவர்கள் வழக்கறிஞர் கருணாநிதி திரு.கழனியப்பன் உள்பட பலரும் சென்றுள்ளனர். அப்போது அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் சுமார் 320 பேர் வடம் பிடிக்கலாம் நான்கு நாடு சார்பாக அதாவது ஒரு நாட்டிற்கு 15 பேர் கொண்டு நான்கு நாட்டிற்கு 60 பேர் கொண்ட பட்டியலைக் கொடுக்கிறோம். அவர்களைத் தாங்கள் தோந்தெடுத்து வடம் பிடிக்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றனர். இதற்கிடையில் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் தலித் தலைவர்கள் கூறியிருக்கிறார். அலுவலகத்திற்கு திரு.கேசவமணி அவர்களும் வந்து நான் கொடுத்த 10 பேரை மட்டும் தேர்வு செய்தால் போதும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கேசவமணியைப் பார்த்து சமூக ரீதியாக அரசியல் ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக நாங்கள் பேராடுகின்றோம். நீங்கள் எதற்கு எங்கள் பணியை தடுக்கப் பார்க்கிறீர்கள் இது தேவையில்லாத நடவடிக்கை என்று கூறியிருக்கின்றனர்.

மறுநாள் 28.06.2004 அன்று தலித் தலைவர்கள் சாதிய இந்துக்களான நான்கு நாட்டு அம்பலக்காரர்களையும் பார்த்து எல்லோரும் சேர்ந்து சமூகத்தேர் இழுப்போம் உரிய ஏற்பாடுகளைச்

செய்யுங்கள் என்று கூறியிருக்கின்றனர். இதில் தென்னிலை நாட்டு அம்பலக்காரரைத் தவிர, மற்ற மூன்று நாட்டு அம்பலக்காரர்களும் தலித்துகளும் வடம் பிடிக்கட்டும். அதற்கு நாங்கள் ஆட்சேபனை தெரிவிக்க மாட்டோம் என்று கூறியிருந்தனர். ஒரு கட்டத்தில் இந்தப் பேச்சு வார்த்தை முழுமையாகவில்லை என்று தெரிகிறது. இதன் பின்னர் 'கண்டதேவி பஞ்சாயத்துத் தலைவர் திரு.கேசவமணி அவர்கள் கொடுத்த 10 நபர்களை மட்டும் தான் வடம் பிடிக்க அனுமதி கொடுப்போம் என்று மாவட்ட நிர்வாகமும் காவல் துறையும் முடிவு செய்து இருக்கிறது.

**தலித் மக்கள் மீதான தாக்குதலும் போலீசாரின் அத்துமீறலும்:**

கடந்த 01.07.2004 அன்று மதியம் 3.00 மணியளவில் சுமார் 6000 மக்கள் கண்டதேவி கோவில் முன்னர் கூடியிருந்தனர். இதில், தலித் மக்கள் 1000 பேர் விருதுநகர், மதுரை, தேனி இராமநாதபுரம், திண்டுக்கல் உள்பட தென் மண்டலப் பகுதியைச் சேர்ந்த சுமார் 1000 போலீசார் கண்டதேவி மற்றும் சுற்றியுள்ள பகுதியில் பாதுகாப்பு பணிக்கு அமர்த்தப்பட்டனர். ஆறாவயல் சந்திப்பு, சிறுமருதூர், மன்னன்வயல் உள்பட சுமார் 12 இடங்களில் போலீஸ் சோதனைச் சாவடி வைக்கப்பட்டு இருந்தது. மதியம் சரியாக 3.30 மணி அளவிற்கு தேர் வடம் பிடிக்கும் நிகழ்வு நடந்தது. அப்போது சாதிய இந்துக்கள் சிலர் வடம் பிடிக்க நின்ற திரு.கேவசமணி உள்பட 10 தலித்துக்களையும் கடுமையாகத் தாக்கி, சட்டையைப் பிடித்துக் கிழித்து, சாதிய ரீதியாக இழிவாகப் பேசி, அவர்களை இழுத்துத் தூக்கி எறிந்திருந்தனர். இந்தச் சம்பவம் மதியம் 3.30 முதல் 3.45-க்குள் நடந்தது.

இதற்கு முன்னதாக , தலித் மக்கள் அனைவரும் கண்டதேவிக் கோவிலுக்கு முன்னதாகவே சுமார் 500 மீட்டர் இடைவெளியில் போலீசாரால் தடுத்து நிறுத்தப்பட்டு இருக்கின்றனர். ' எதற்காக எங்களைத் தடுக்கிறீர்கள்? என்று தலித் மக்கள் கேட்டதற்கு நீங்கள் யாரும் தேர் அருகில் செல்ல அனுமதி இல்லை உங்க ஆட்கள் 10 பேருக்கு மட்டும்தான் அனுமதி என்று போலீசார் கூறியிருக்கின்றனர். இதனால், தலித் மக்கள் அனைவரும் அம்மன் கோவில் அருகிலேயே தடுத்து நிறுத்தப்பட்டனர். "விடுதலையை விரும்புபவர்கள், ஜனநாயகத்தை விரும்புபவர்கள், சாதி – தீண்டாமை ஒழிப்புக்குப் போராட வாருங்கள்"[10] என்ற வரிகளுக்கு ஏற்ப 10 தலித்துகளும் சாதிய இந்துக்களால் தாக்கப்பட்டதை அறிந்த மற்ற தலித் சமூகத்து மக்கள் போலீசாருக்கு எதிராக முழக்கமிட ஆரம்பித்து உள்ளனர். பாகுபாடு காட்டியதால்தான் நாங்கள் இன்று அடிவாங்கி இருக்கிறோம். போலீசார் எங்களை ஏன் வடம் பிடிக்க அனுமதி மறுக்கிறார்கள்? என்று கேள்வி எழுப்ப ஆரம்பித்துள்ளனர். இதனைக் கண்ட சாதிய இந்துக்கள், பனைமரத்துல வவ்வாலா? கள்ளருக்கே சவாலா? வைச்சுப்புட்டோம், வைச்சுப்புட்டோம் ஆப்பு' பள்ளனுக்கே வைச்சுப்புட்டோம் ஆப்பு என்று எதிர் முழக்கம் இட்டுள்ளனர். தலித்துக்களும் டாக்டர்.கிருஷ்ணசாமி புகழ் ஓங்குக, திருமாவளவன் புகழ் ஓங்குக, ஜான் பாண்டியன் புகழ் ஓங்குக! என்று முழக்கங்கள் எழுப்பியுள்ளனர். இதற்கிடையில் சுமார் 400க்கும் மேற்பட்ட போலீசார் தலித் மக்களைச் சுற்றி

நின்று கொண்டு, அவர்களைத் தங்கள் கட்டுப்பாட்டு வளையத்திற்குள் கொண்டு வந்தனர். நிலைமை பதட்டமாக இருப்பதனால் 500க்கம் மேற்பட்ட தலித்துக்கள் அவ்விடத்திலிருந்து வெளியேறி இருக்கின்றனர். இந்நிலையில் மாலை 5.00-5.30 மணி இருக்கம் போது சாதிய இந்துக்கள் தலித் மக்களைப்பார்த்து சாதிய ரீதியாகவும், பாலியல் ரீதியாகவும் இழிவாகப் பேச, தலித்துகளும் பதிலுக்கு சாதிய இந்துக்களை இழிவாகப் பேசியிருக்கின்றனர். இந்நிலையில் சாதிய இந்துக்கள் சிலர் கற்களைக் கொண்டும் செருப்புகளை வீசியும் தலித் மக்களைத் தாக்கியுள்ளனர். பதிலுக்கு தலித்துக்களும் கற்களைக் கொண்டு சாதிய இந்துக்கள் மீது வீசி, தாக்கியிருக்கின்றனர்.

இந்நிலையில் அங்கு குவிக்கப்பட்டிருந்த போலீசார் லத்திகளைத் தூக்கிக் கொண்டு "பள்ளத் தேவடியா பசங்களா... உங்களுக்குத் தேர் வடம் கேட்குதோ, உங்களை கொல்லாமல் விடமாட்டோம்"[11] என்று கூறிக்கொண்டு லத்திகளாலும் பூட்ஸ் கால்களாலும் துப்பாக்கியின் பின் கட்டைகளாலும் தலை, முதுகு, நெஞ்சு, பிட்டம், கால், கை, முகம் என்று போலீசாரின் கொடிய தாக்குதல்கள் மிக வன்மமான முறையில் நடந்து இருக்கிறது. இந்த தாக்கதலில் சுமார் 20க்கும் மேற்பட்ட தலித்துகள் படுகாயம் அடைந்தனர். "தலித்துகளின் முன்னேற்றம், வளர்ச்சி, விடுதலை ஆகியவற்றிற்கு ஆதரவான சூழல்கள் தோன்றுவதற்குப் பதிலாக இந்தியச் சமூகத்தின் சாதிக் கொடுக்குகள் மேலும் கூர்மையடைந்துள்ளன. பட்டியல் சாதிகளின் பட்டியல் பழங்குடிகளின் அரசியல் பிரதிநிதிகள் பாராளுமன்றத்திலும் சட்டசபைகளிலும் பஞ்சாயத்துகளிலும் அதிக எண்ணிக்கையில் இடம்பெற்ற பிறகும் கூடச் சாதியத்தின் இறுக்கம் குறைந்தபாடில்லை. அதிகாரவர்க்கத்தினர், காவல்துறை, சட்ட அமுலாக்கத்துறை, சட்ட விளக்கங்கள் வழங்கும் நிறுவனங்கள், சில வேளைகளில் பத்திரிக்கைத் துறையினர் ஆகிய பகுதியினரிடம் உயர் ஜாதி மனோபாவங்களும் அவை சார்ந்த வக்கிரங்களும் மிக ஆழமாக பதிந்துள்ளன."[12] இந்த மனோபாவமே போலீசாரின் அத்துமீறலும் கொடூரமான தாக்குதலும் நடைபெறுவதைக் காண முடிகிறது. போலீசாரின் கொடிய தாக்குதல்களால் பலத்த காயமடைந்த 10 தலித்துகள் தேவகோட்டை அரசு மருத்துவமனையிலும், தனியார் மருத்துவமனைகளிலும் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திரு.பூமிநாதன்(41) த.பெ. ஏகனாண்டி கீழச்செம்பொன்மாரி கிராமத்தைச் சேர்ந்த இவருக்கு இடது கால் தொடையில் லத்தியால் தாக்கியதால் மிகப்பெரிய அளவில் வீக்கமாக, கன்றிப்போயும் இரத்தக் கட்டும் உள்ளது. இடது முட்டி காலில் சிறு இரத்தக் காயம் இடது தலை நெற்றிக்கு மேல்புறத்தில் லத்தியால் தாக்கியதால் கடுமையான இரத்தக் காயம் இவரை சுமார் 8 போலீசார் சுற்றி நின்று கொண்டு, லத்திகளால் கடுமையாகத் தாக்கியுள்ளனர். திரு.முருகேசன்(23) த.பெ.முத்து கீழச்செம்பொன்மாரி கிராமத்தைச் சேர்ந்த இவருக்க உச்சந்தலையில் கடுமையாக லத்தித் தாக்குதல், இரத்தக் காயம், முதுகில் லத்தித் தாக்குதல் அவரின் தந்தை முத்துவுக்கு போலீசாரின் கடுந்தாக்குதலால் இடது கை, கால் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது.

கண்டதேவி தலித் குடியிருப்புப் பகுதிக்குச் சென்று வீட்டுக்குள் புகுந்து அங்குள்ள தலித் மக்களையும் போலீசார் லத்தித் தாக்குதல் நடத்தியுள்ளார். இது குறித்து மனித உரிமை குழுவினரிடம் தேவகோட்டை டி.எஸ்.பி.திரு.மகேந்திரன் எந்தவிதமான லத்திச்சார்ஜ்சும் நடக்கவில்லை; யாரையும் தாக்கவில்லை. அசம்பாவிதம் நடந்தது என்று கூறுவதெல்லாம் பொய்யானது என்று கூறினார். பல்வேறு பாதிக்கப்பட்ட மக்களையும் தலித் மக்களையும், பத்திரிக்கையாளர்களும் மனித உரிமை குழுவினர்களும் நேரடியாக சந்தித்து நேர்காணல் செய்த தகவலின் அடிப்படையில் போலீசார் திட்டமிட்டே உள்நோக்கத்துடன் இந்த தாக்குதலை நடத்தி இருப்பது தெரிய வருகிறது.

சப்கலெக்டர் திரு.ரன்வீா பிரசாப் அவர்கள் நிலைமை சுமூகமாக அமைதியாக உள்ளது' என்று தெரிவித்தார். ஆனால் கண்டதேவி பஞ்சாயத்துத்தலைவர் திரு.கேசவமணியால் கூட்டிச் சென்று வடம் பிடிக்க நின்ற 10 தலித்துகளையும் சாதிய இந்துக்கள் மிகக் கொடூரமாகத் தாக்கியுள்ளனர். போலீசாரும் மிகக்கொடிய தாக்குதலைத் தலித் மக்கள் மீது நடத்தி இருக்கின்றனர். மாவட்ட நிர்வாகமும். காவல்துறையினரும் தலித் மக்களின் பாதுகாப்பு சார்ந்த நடவடிக்கைகளில் எவ்வித ஆர்வமும் அக்கறையும் காட்டவில்லை என்பது தெள்ளத்தெளிவாக விளங்குகிறது.

“தென் மாவட்டங்களில் 1995 முதல் 1997 வரை தொடர்ச்சியாக 672 இடங்களில் சாதிக் கலவரங்கள் நடந்தன. 95 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் 67 பேர் தலித்துகள் ஆவர். ருபாய் 102 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் நாசமாகின”[13]

மாணவர்களிடமும் சாதிய உணர்வுகள் வளர்க்கப்பட்டன. தீண்டாமை, சாதிப்பாகுபாடுகள், இரட்டைக் குவளைகள், பொதுக்குளங்களில் தண்ணீா எடுக்கத்தடை, கோவில் விழாக்களில் தகராறுகள், பஞ்சாயத்து நிர்வாகத்தில் சாதி நீடித்து வருகின்றன. இவற்றிற்குத் தீண்டாமையே அடிப்படையாக அமைந்துள்ளது.

**மனித உரிமைக் காப்பாளர்கள் தடுக்கப்படுதல்;**

கடந்த 07.07.2004 அன்று மதியம் 1மணியளவில், எமது குழுவினர் கண்டதேவி கிராமத்திற்குச் சென்றபோது, கிராமத்தின் நுழைவுவாயிலில் போலீசாரால் தடுத்து நிறுத்தப்பட்டனர். திரு.ஜான் ஜார்ஸ் என்கிற காவல் ஆய்வாளர், நீங்கள் யார்? எதற்காக இங்கு வந்து இருக்கிறீர்கள்? உங்களுக்கு என்ன வேண்டும்? போன்ற கேள்விகளை சரமாரியாகக் கேட்டார். அதற்கு மனித உரிமைக்குழுவினர் கள ஆய்வுப்பணிக்காக வந்திருக்கிறோம் என்று கூறினர். ஆனால் அவர்களை காவல்துறை உயர் அதிகாரிகளும், சப்கலெக்டர் திரு.ரன்வீா பிரசாத் அவர்களாலும் தடுத்து நிறுத்தப்பட்டனர். கண்டதேவி சொர்ணமூர்த்தீஸ்வர் கோவில் தேர்வடப் பிரச்சினையில் தீண்டாமை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்தக் கொடுமைக்கு எதிராக மாவட்ட நிர்வாகம் என்ன வட்வடிக்கை எடுத்து இருக்கிறது என்று கேட்டதற்கு இது நடவடிக்கையால் தீர்க்க

முடியாது சமாதானத்தால் அமைதிக் கூட்டத்தில் மட்டுமே தீர்க்க கூடிய பிரச்சினை என்று திரு.ரன்வீர் பிரசாத் அவர்கள் கூறினார். மேலும், மனித உரிமை குழுவினர் கண்டதேவிக் கிராமத்திற்குச் செல்ல இறுதிவரை அனுமதி மறுத்து விட்டனர். இந்த உரையாடலின் போது சிவகங்கை டி.எஸ்.பி. திரு.ஜெ.கருணாநிதி அவர்களும் இரண்டு வருவாய்த்துறை அலுவலர்களும் உடன் இருந்தனர்.

ஐ.நா. சபையின் மனித உரிமைக் காப்பாளர்க்கான உரிமைப் பிரகடனத்தில் பிரிவு 13(3) இல் "மனித உரிமைகளையும், அடிப்படைச் சுதந்திரங்களையும் வளர்த்தெடுத்துப் பாதுகாக்கும் நோக்கில் மூல ஆதாரங்களைத் தேடவும் -பெறவும் - தேடிய ஆதாரங்களை அனுபவிக்கத் தனியாகவோ, கூட்டாகவோ ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு" என்று கூறப்பட்டுள்ளது.

இந்தத் தேசத்தில் எப்பகுதிக்குச் சென்றும் செய்திகளைச் சேகரிக்கலாம் என்று நம்முடைய அடிப்படை உரிமை கூறுகிறது. ஆனால், சிவகங்கை மாவட்ட நிர்வாகமும் போலீசாரும் மனித உரிமைக் குழுவினைரைத் திட்டமிட்டே வேண்டும் என்றே அப்பகுதிக்குச் செல்ல விடாமல் தடுத்துள்ளனர். இந்தப்போக்கு மனித உரிமைப் பணிகளை முடக்கச் செய்யும் நடவடிக்கையாகும். "அரசியல் அமைப்பு சட்டத்தில் 17-வது பிரிவு தீண்டாமையை ஒழித்துக் கட்டுகிறது என்று சேர்த்து விட்டால் மட்டும் தீண்டாமை ஒழிந்து விடாது. சாதி படிநிலையின் செயல்பாட்டில் ஆகக் கொடூர வடிவம்தான் தீண்டாமை. சாதி ஒழிப்பும், தீண்டாமை ஒழிப்பும் தனித்தனியாக பிரித்துப் பார்ப்பது முட்டாள் தனம் என்கிறார் டாக்டர் அம்பேத்கார் சாதி உணர்வு நீட்டிக்கும் போது தீண்டாமை மட்டும் ஒழித்து விடமுடியாது. சாதி ரீதியாக திரண்டு தீண்டாமையையும், சாதியையும் ஒழித்து விட முடியாது. சமூக, வர்க்க, ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகள் ஒன்றிணைந்தால் மட்டுமே சாதியை, தீண்டாமையை ஒழிக்க முடியும்.

தேவகோட்டை வட்டத்திலுள்ள கண்டதேவி கோவிலின் பிரச்சினையைப் போன்று கண்டதேவி ஊரின் அருகாமையில் அமைந்துள்ள மேலச் செம்பொன்மாரி கிராமத்தில் பொட்டல் காளியம்மன் கோயில் அமைந்து உள்ளது. இக்கோவிலில் கண்டதேவி கோவிலைப் போன்று இங்கும் தீண்டாமைப் பல வடிவங்களில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இக்கோவிலில் பங்குனித் திருவிழாவில் ஆடுகள் கோழிகள் பலியிடப்பட்டு படையல் வைத்து வழிபடும் நிகழ்ச்சி நடைபெறும். திருவிழாவில் இங்கு ஒரு தரப்பு மக்களை மட்டும் அனுமதிக்க மறுத்து வருகின்றனர். இதனை எதிர்த்து பல தரப்பினரும் போராட்டம் நடைபெற்றும் சுமூகமான முடிவு எட்டப்படாததால் மேலச்செம்பொன்மாரி கிராமத்தை சேர்ந்த காளிமுத்து உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில் எங்கள் கிராமத்தில் பொட்டல் காளியம்மன் கோயில் உள்ளது பங்கு மாதத்தில் நடைபெறும் விழாவில் ஆடுகள்,கோழிகள் பலியிடப்பட்டு படையல் வைத்து வழிபடும் நிகழ்ச்சி நடக்கும். இதில் ஆறுமுகம் என்பவர் திருவிழாவில் எங்களை அனுமதிக்க முடியாது என எதிர்ப்புத் தெரிவிக்கிறார். போலீஸ் பாதுகாப்புடன் எங்களை விழாவில் பங்கேற்க அனுமதிக்க உத்தரவிட வேண்டும் என குறிப்பிட்டார்.

இந்த மனுவை விசாரித்த மதுரை உயர்நீதிமன்ற கிளை நீதிபதி என்.கிருபாகரன் "கடவுள் ஜாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டவர். அனைவருக்கும் பொதுவானவர். அதை யாரும் தடுக்க முடியாது. மற்ற சமூகத்தினரை அனுமதிப்பதில்லை என்ற நடைமுறை காலங்காலமாக பின்பற்றபட்டாலும், இது கோயில் திருவிழா சம்பந்தமான பிரச்சனையாகும். இரு பிரிவினருக்கும் இடையே மோதல் ஏற்படும் இடமாக கோயில் இருக்கக்கூடாது. சுமூகமாக கையாள வேண்டும். இருதரப்பினரும் ஆகஸ்ட் 18ல் ஆர்.டி.ஓ தலைமையில் நடக்கும் சமாதானக் கூட்டத்தில் ஆஜராக வேண்டும். அதில் ஏற்படும் உடன்பாட்டிற்கு இருதரப்பும் கட்டுப்பட வேண்டும். ஒருமித்த முடிவு ஏற்படாவிட்டால் திருவிழா நடத்தக்கூடாது. "16 என 12.08.2014 அன்று தனது தீர்ப்பினை வழங்கினார். தீர்ப்பிற்கு அடுத்த நிலையில் பல்வேறு பிரச்சினைகளைத் தாண்டித் திருவிழா நடைபெற்றாலும், மறைமுகமாக தலித் மக்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள்.

## SUMMARY OF THE FINDINGS ( IN 500 WORDS )

- கண்டதேவித் தேர் இழுக்கும் பிரச்சினை மாநில அளவில் பதட்டத்தையும் கவனத்தையும் பெற்று இருக்கின்ற வேளையில், எந்த உத்தரவாதத்தின் அடிப்படையில் 10 தலித்துகளை மட்டும் தேர் இழுக்க அரசு அனுமதி கொடுத்தது?
- நீதிமன்ற உத்தரவு என்பது அனைத்து இந்துக்களும் வடம்பிடிக்க உரிமை உண்டு என்று கூறியிருக்கிறபோது எதற்காக தலித் மக்கள் மீது அரசு பாகுபாட்டுடன் நடந்து கொண்டது?
- சாதிய இந்துக்கள் எத்தனை பேர் வேண்டும் என்றாலும் வடம் பிடிக்கலாம் தலித்துகள் 10க்கும் மேற்பட்டோர் வடம் பிடிக்கக் கூடாது. இது என்ன பாகுபாடு?
- தலித்துக்கள் தாக்கப்பட்டது தெரிந்தும் போலீசார் தலித்துக்களை அழைத்து சமரசம் (தாஜா) செய்து உள்ளனர். தாக்கப்பட்ட தலித்துகள், பத்திரிக்கையில், எங்களைக் கள்ளர்கள் யாரும் தாக்கவில்லை என்று கூறியிருக்கிறார்கள். இந்த போக்கு எதை உணர்த்துகிறது?
- சட்டத்திற்கு புறம்பாகச் செயல்படுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் அவர்களை (கள்ளர்களை) அழைத்து ஏன் இந்தச் சமரசப் பேச்சுவார்த்தை?
- மனித உரிமை காப்பாளர்களைக் கண்டதேவிக் கிராமத்திற்கு உள்ளே செல்ல அனுமதி மறுத்ததன் பின்னனி என்ன?
- நீதிமன்ற உத்தரவை அரசு கடைப்பிடிப்பதற்கு ஏன் இத்தனை பாரபட்சம்?
- கண்டதேவி கோவிலைப் போன்று மேலச்செம்பொன்மாரி கிராமத்தில் பொட்டல் காளியம்மன் கோவிலில் தீண்டாமைக் கடைபிடிக்கப்படுவது கண்டதேவியில் உள்ள சாதிய இந்துக்களின் தூண்டுதலே காரணமா?

- கண்டதேவி தேர் திருவிழாவின் போது 01.07.2004 அன்று மாலை 5.00 மிண அளவில் பாதுகாப்பிற்காக வந்த போலீசார், தலித் சமூகத்து மக்களை லத்தியாலும், பூட்ஸ் காலாலும் மிகக் கொடூரமாக அடித்து, சித்ரவதை செய்தது ஏன்?
- போலீசாரின் மிகக் கொடிய தாக்குதல்களால் தலை, நெஞ்சு, கை, கால் என்று உடலில் பல்வேறு பகுதிகளில் இரத்தக்காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களுக்காக அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்காததற்கு என்ன காரணம்?
- தலித்துகளைச் சாதிய ரீதியாகவும், பாலியல் ரீதியாகவும் மிகவும் இழிவாகப் பேசிய போலீசார் மற்றும் சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகள் மீது தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டம் 1989, இ.த.ச. ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து அரசு நடவடிக்கை மேற்கொள்ளாதது எதனை உணர்த்துகிறது?.
- தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலித் பிரிவு, தேசிய தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆணையம், மாநில் மனித உரிமை ஆணையம் தாமாகவே முன்வந்து, சம்பந்தப்பட்ட இடத்திற்கு தேரிடையாகச் சென்று, பாதிக்கப்பட்டவர்களையும், சாட்சிகளையும், பொதுமக்களையும் சந்தித்து, உண்மை நிலைகளைக் கண்டறித்து, உண்மையின் அடிப்படையில் அரசுக்கு முறையாகப் பரிந்துரை வழங்க வேண்டும்.
- அனைத்து இந்துக்களும் கண்டதேவித் திருவிழாவின் போது, வடம் பிடிக்கலாம்' என்று சென்னை உயர்நீதிமன்றம் 1999 ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கியுள்ளது. இத்தீர்ப்பினை நடைமுறைபடுத்த வேண்டிய பொறுப்பு, மாவட்ட நிர்வாகத் துறைக்கும், காவல் துறைக்கும் உள்ளது. ஆகவே, இத்தீர்ப்பினை நடைமுறைப்படுத்தவும், நடைமுறைப்படுத்தப்படும் போது வன்முறையில் ஈடுபடுவோர்கள் மீது நடவடிக்கை எடுப்பதும் மாவட்ட நிர்வாக மற்றும் காவல் துறைக்கு உள்ளது. ஆனால், இது நாள் வரை உரிய நடவடிக்கை மாவட்ட நிர்வாகமும், காவல்துறையும் மேற்கொள்ளவில்லை. ஆகவே, தமிழக அரசு மாவட்ட ஆட்சி தலைவர் மீதும், மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் மீதும் உரிய விசாரணை மேற்கொண்டு, தக்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

## CONTRIBUTION TO THE SOCIETY

- நீதிமன்ற உத்தரவினை வெறும் வெற்று அடையாளத்திற்காக தலித் மக்களை தேர்வடம் பிடிக்க அனுமதிப்பது, ஏற்கனவே 1988 ஆம் ஆண்டு வழங்கிய தீர்ப்பிற்கு எதிரானது.

- தலித் மக்கள் மிகவும் பின் தங்கியவர்களாக இருப்பதால் அரசு நிர்வாகம் அவர்கள் பக்கம் உறுதிபட நின்று, பாதுகாப்பு வழங்கி பெரும்பான்மை தாலித் மக்கள் தேர்வடம் பிடிக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்பதை இவ்வாய்வு சுட்டிக்காட்டுகிறது.
- நீதிமன்ற ஆனையை மீறுபவர்கள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். தேரோட்ட நிகழ்வின் அறிக்கையை ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட ஆட்சியர், நீதிமன்றத்திற்கு உடன் சமர்பிக்க வேண்டும் என்பது இவ்வாய்வின் கருத்தாக அமைகிறது.
- எண்ணிக்கை அடிப்படையில் தலித் மக்களை தேர்விடத்தில் பங்கு பெற வைப்பதை அரசு தவிர்க்க வேண்டும் என்பதை இவ்வாய்வு உணர்த்துகிறது.
- கண்டதேவி கோயிலில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக நடைபெற்ற இந்த வரலாற்று உண்மையானது பலருக்கு இவ்வாய்வின் மூலம் தெரியவரும். இதன் மூலம் அனைத்து தரப்பு மக்களும் கண்டதேவி பிரச்சனை குறித்து பொது தளத்தில் விவாதிக்கப்பட வேண்டும், என்பதை இவ்வாய்வு உணர்த்துகிறது.
- கண்டதேவி கோயில் நடைபெற்ற சாதிய மோதல்களைப் போன்று இந்தியா முழுவதும் தாழ்த்தப்பட்ட, மிகவும் பின் தங்கிய சமூக மக்களுக்கு எதிராக நடைபெறும் கலவரங்கள் அனைத்தும் ஆய்வுக்கு உட்படுத்தப்பெற்று வெளிக்கொணர வேண்டும்.
- ஆய்வின் மூலம் ஆதிக்க சாதியினரால் தலித் மக்களுக்கு ஏற்பட்ட அநீதிகளை ஆவணப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், பல்வேறு ஆய்வுத்தளத்தில் உண்மைகளைக் கண்டறிய இவ்வாய்வானது துணை நிற்கும்.
- இரண்டு கற்களை ஒன்றாக சேர்த்து உரசும் போது அது தீ பற்றுவதைப் போல ஆதிக்க சாதியினரால் ஏற்படும் கலவரத்திற்கு எதிராக ஒரு போராட்ட புரட்சி வெடிக்கும் என்பதை இவ்வாய்வு உணர்த்துகிறது.
- தண்ணீரின் உள்ளே பந்தை அமுக்கும் போது அது மீண்டும் தண்ணீரின் மேல் எழுவதைப் போல் கோயிலின் பொது விழாவில் தொடர்ச்சியாக, தொடர்ந்து, புறக்கணிக்கப்படும் தலித் மக்கள், தங்களுக்காகவும், தங்கள் உரிமைகளுக்காகவும் தொடர்ந்து போராடிக்கொண்டிருப்பதை இவ்வாய்வு பதிவு செய்ய விளைகிறது.
- தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகள், பாதுகாக்கப்படுவதற்கான சட்ட விதிகள் இருந்தாலும் அவை நிர்வாகத் துறையினரால் சரியாக அமலாக்கப்படுவதில்லை; மக்களிடம் முறையான விழிப்புணர்வும் ஏற்படவில்லை; தலித் மக்கள் நீங்கலாக மற்ற மக்கள் பகுதியினரிடமும், ஒடுக்கப்பட்ட மக்களுளின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

- பார்பானிய சாதிப் படிநிலை அமைப்பின் ஆகக் கொடூரமான வடிவம்தான் தீண்டாமை. சாதி உணர்வின் மிக இழிந்த வெளிப்பாடுதான் தீண்டாமை. சாதியும், சாதி உணர்வும் அப்படியே நீடிக்கும் போது தீண்டாமையை மட்டும் தனியே ஒழிப்பது என்பது சாத்தியமாகாது.
- தீண்டாமையும், சாதி ஆதிக்க உணர்வும், சாதிப் பாகுபாடும் 'தனது நலனுக்கே உகந்ததல்ல' என்று தீண்டத்தக்க சாதிகளின் உழைக்கும் மக்கள் தங்கள் சொந்த அனுபவத்திலிருந்துது உணர வேண்டும்.
- உண்மையான சமூக மாற்றம் என்பது சட்டத்தினால் இருக்க முடியாது என்பதை மேற்கூறிய உண்மைச் சம்பவங்கள் நமக்கு உணர்த்துகின்றன. தனது உரிமை பறிக்கப்படும் போதும் பறிபோகும் போதும் அதனை எதிர்த்து உழைக்கும் மக்கள் வெகுண்டெழுந்து வீரம் செறிந்த போராட்டத்தினை நடத்தும் போதுதான் உண்மையான சமூக மாற்றம் என்பதுத நிகழும். இது வரலாறு நமக்கு உணர்த்தியிருக்கும் உண்மை.

| | | |
|---|---|---|
| WHETHER ANY PH.D ENROLLED/PRODUCED OUT OF THE PROJECT | : | Yes. Project Fellow Doing Ph.D and He Will Complete at the earliest. |
| NO.OF PUBLICATIONS OUT OF THE PROJECT(PLEASE ATTACH RE-PRINTS) | : | Two Published |

PRINCIPAL INVESTIGATOR

REGISTRER

தினமலர் - ஜூன் - 15 - 2014

# கண்டதேவி வழக்கு ஐகோர்ட் உத்தரவு

மதுரை, ஜூன் 15— சிவகங்கை மாவட்டம் கண்டதேவியை சேர்ந்தவர் சொர்ணலிங்கம்.

இவர் மதுரை ஐகோர்ட் கிளையில் தாக்கல் செய்த மனுவில் கூறியுள்ளதாவது: கண்டதேவி சொர்ணமூர்த்தீஸ்வரர் கோயில் திருவிழா, சில ஆண்டுகளாக நடக்கவில்லை. தேர் பராமரிப்புப் பணி எனக் கூறி, கோயில் நிர்வாகம் விழா நடத்தவில்லை. தேரோட்டம் இன்றி திருவிழா நடத்தலாம். திருவிழா நடத்த உத்தரவிட வேண்டும்,' என மனு தாக்கல் செய்தார்.

சிவகங்கை இந்து அறநிலையத்துறை இணை கமிஷனர் நாளை (ஜூன் 16) ஆஜராகி விளக்கமளிக்க வேண்டும் என நீதிபதிகள் வி.ராமசுப்பிரமணியன், வி.எம்.வேலுமணி கொண்ட பெஞ்ச் உத்தரவிட்டது.

தினமலர் - ஜூன் - 17 - 2014

# கண்டதேவி திருவிழா ஐகோர்ட் உத்தரவு

மதுரை, ஜூன் 17–

சிவகங்கை மாவட்டம் கண்டதேவியை சேர்ந்தவர் சொர்ணலிங்கம், மதுரை ஐகோர்ட் கிளையில் தாக்கல் செய்த மனு: கண்டதேவி சொர்ணமூர்த்தீஸ்வரர் கோயிலில், 7 ஆண்டுகளாக திருவிழா நடக்கவில்லை. தேர் பராமரிப்பு பணி நடப்பதாகக்கூறி, தாமதிக்கின்றனர். விழா நடத்த உத்தரவிட வேண்டும் என கூறியிருந்தார்.

இவ்வழக்கில், நீதிபதிகள் வி.ராமசுப்பிரமணியன், வி.எம்.வேலுமணி பெஞ்ச் முன், சிவகங்கை அறநிலையத் துறை இணை கமிஷனர் முத்துதியாகராஜன் ஆஜரானார். அவர், "நாட்டார்கள் ஒத்துழைத்தால் விழா நடத்தத் தயார். தேர் கட்டுமானப் பணி நடக்கிறது," என்றார்.

தென்னிலை நாட்டார் தரப்பில், 'தேவையின்றி விழா நடத்தக்கூடாது' என வலியுறுத்தப்பட்டது.

நீதிபதிகள் உத்தரவு: விழா நடத்த ஆட்சேபனை இல்லை என்பதற்கான ஒப்புதலை, பிற 3 நாட்டார்களிடமிருந்து பெற்று, இன்று பதில் மனு செய்ய வேண்டும்.

தினகரன் - ஜூன் 17 - 2014

கண்டதேவி கோயிலில்

# திருவிழா நடத்தினால் சட்டம் ஒழுங்கு பிரச்னை

## இந்து அறநிலையத்துறை கருத்து

மதுரை, ஜூன் 17: கண்டதேவி சொர்ணமூர்த்தீஸ்வரர் கோயிலில் திருவிழா நடத்தினால் சட்டம், ஒழுங்கு பிரச்னை ஏற்படும் என இந்து அறநிலையத்துறை இணை ஆணையர் ஐகோர்ட் கிளையில் கருத்து தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டம், கண்டதேவியை சேர்ந்த சொர்ணலிங்கம், ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில், 'கண்டதேவி சொர்ணமூர்த்தீஸ்வரர் கோயில் திருவிழா மற்றும் தேரோட்டம், தேர் பராமரிப்பை காரணம் காட்டி 7 ஆண்டுகளாக நடத்தப்படவில்லை. இதனால் ஊர் மக்களிடம் ஒருவிதமான அச்சம் ஏற்பட்டுள்ளது. எனவே கண்டதேவியில் திருவிழா நடத்த உத்தரவிட வேண்டும்' என கூறப்பட்டிருந்தது.

மனுவை நீதிபதிகள் ராமசுப்பிரமணியன், வேலுமணி ஆகியோர் விசாரித்தனர். மனுதாரர் சொர்ணலிங்கம் வாதிடுகையில், 'தேர் பராமரிப்பை காரணமாக கூறுவதால், தேரோட்டம் இல்லாமல் கோயில் திருவிழா நடத்த அனுமதி வழங்க வேண்டும்' என்றார். வழக்கை விசாரித்த நீதிபதிகள், 'சிவகங்கை இந்து அறநிலையத்துறை இணை ஆணையர் ஜூன் 16ல் நேரில் ஆஜராக வேண்டும்' என உத்தரவிட்டிருந்தனர்.

அதன்படி சிவகங்கை இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் முத்து தியாகராஜன், நீதிபதிகள் முன்னிலையில் நேற்று ஆஜரானார். முத்து தியாகராஜன் கூறுகையில், "திருவிழா நடத்துவதில் வெவ்வேறு தரப்பினர் இடையே பல்வேறு கருத்து வேறுபாடுகள் உள்ளன. திருவிழா நடத்தினால் சட்டம், ஒழுங்கு பிரச்னை ஏற்படும் என்பதால், விழாவை நடத்தமுடியாது," என்றார்.

இதே வழக்கில் தென்னிலை நாட்டார்கள் தரப்பில் தாக்கல் செய்த மனுவில், 'தேரோட்டம் இல்லாமல் திருவிழா நடத்த அனுமதிக்கக்கூடாது. தேரோட்டமும் சேர்ந்து நடத்த வேண்டும்' என கூறப்பட்டிருந்தது. மனுவை நீதிபதிகள் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டு, திருவிழா நடத்துவதற்கு மற்ற 3 நாட்டார்களிடம், 'ஆட்சேபனை இல்லை' என்ற உறுதிமொழியுடன் புதிய மனு தாக்கல் செய்ய வேண்டும்' என உத்தரவிட்டு, விசாரணையை தள்ளி வைத்தனர்.

தினமலர் - ஜூன் - 19 - 2014

# கண்டதேவியில் திருவிழா நடத்த ஐகோர்ட் உத்தரவு

மதுரை, ஜூன் 19– சிவகங்கை மாவட்டம் கண்டதேவியில் உள்ள சொர்ணமூர்த்தீஸ்வரர் கோயில் திருவிழாவை, யாருக்கும் முதல்மரியாதை வழங்காமல், போலீஸ் பாதுகாப்புடன் நடத்த, மதுரை ஐகோர்ட் கிளை உத்தரவிட்டது.

கண்டதேவியை சேர்ந்த சொர்ணலிங்கம், "சொர்ண மூர்த்தீஸ்வரர் கோயிலில், 7 ஆண்டுகளாக தேரோட்டத்துடன் திருவிழா நடத்தவில்லை. தேர் பராமரிப்பு பணி நடப்பதாகக்கூறி, நிர்வாகம் தாமதிக்கிறது. விழா நடத்த உத்தரவிட வேண்டும்," என ஐகோர்ட் கிளையில் மனு செய்தார்.

மனுவை விசாரித்த நீதிபதிகள் வி.ராமசுப்பிரமணியன், வி.எம்.வேலுமணி பெஞ்ச் உத்தரவு: பாரம்பரிய முறையில், விழா நடத்த அறநிலையத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். தேரை பழுதுபார்க்க வேண்டும். தேரோட்டம் இன்றி விழா நடத்த வேண்டும்.

நாட்டார்கள் உட்பட யாரும் முதல் மரியாதை கோரக்கூடாது. ஜாதி, இன வேறுபாடின்றி அனைவரும் பங்கேற்கலாம். போலீசார் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இந்த உத்தரவு நிறைவேற்றப்பட்டது குறித்து, அரசுத் தரப்பில் ஜூலை 30ல் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். இவ்வாறு உத்தரவிட்டது.

தி இந்து - ஜூன்-19-2014

# HC orders conduct of Kandadevi temple festival

Special Correspondent

**MADURAI:** The Madras High Court Bench here on Wednesday ordered the conduct of Aani festival of Swarnamurtheeswarar Temple in Kandadevi in Sivagaga district this year by following all traditional procedures but for the temple car procession.

The temple festival has been in the news since 1998 when a section of Dalits charged the Caste Hindus with not letting them pull the temple car. Since then, the festival was not conducted regularly as the temple management claimed that the car was not in a working condition.

Disposing of a public interest litigation petition, a Division Bench of Justices V. Ramasubramanian and V.M. Velumani directed Hindu Religious and Charitable Endowments Department to get the temple car repaired soon so that it could be pulled at least next year.

The judges made it clear that all other events should be conducted this year, and everyone should be allowed to participate in the festival.

The court also directed the Sivaganga Superintendent of Police to provide adequate protection during the temple festival and asked for a compliance report by June 30.

PTR
College of Engineering & Technology MADURAI
www.ptrengg.com
0452-2489001 / 02

தினத்தந்தி - ஜூலை - 1 - 2014

### கண்டதேவி கோவில் திருவிழா:

# 'அனைத்து சமுதாயத்தினரும் கலந்து கொண்டனர்'

## இந்து அறநிலையத்துறை அதிகாரி, ஐகோர்ட்டில் அறிக்கை தாக்கல்

மதுரை, ஜூலை.1—

கண்டதேவி கோவில் திருவிழாவில் அனைத்து சமுதாயத்தினரும் கலந்து கொண்டனர் என்று இந்து அறநிலையத்துறை அதிகாரி, ஐகோர்ட்டில் அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

### கண்டதேவி திருவிழா

சிவகங்கை மாவட்டம் கண்டதேவியில் உள்ள புகழ்பெற்ற சொர்ண மூர்த்தீசுவரர் மற்றும் குங்கும காளியம்மன் கோவில் திருவிழாவை நடத்த உத்தரவிட வேண்டும் என்று கண்டதேவியை சேர்ந்த பெரி. சொர்ணலிங்கம் என்பவர் மதுரை ஐகோர்ட்டு கிளையில் மனு தாக்கல் செய்து இருந்தார்.

மனுவை விசாரித்த ஐகோர்ட்டு, "கண்டதேவி கோவிலில் பாரம்பரிய முறைப்படி திருவிழா நடத்த அறநிலையத்துறைக்கு அனுமதி வழங்கப்படுகிறது. திருவிழாவின்போது நாட்டார்கள் உள்பட யாரும் மரியாதை உரிமை கோரக் கூடாது. மேலும் திருவிழாவில் சாதி வேறுபாடு இன்றி அனைவரும் கலந்து கொள்ளலாம். விழாவிற்கு உரிய போலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும்" என்று உத்தரவிட்டது.

### அறிக்கை தாக்கல்

மேலும், கோர்ட்டு உத்தரவுப்படி திருவிழாவை நடத்தியது சம்பந்தமாக இந்து அறநிலையத்துறை அதிகாரிகள் அறிக்கை தாக்கல் செய்யவும் ஐகோர்ட்டு உத்தரவிட்டது. குங்கும காளியம்மன் கோவில் திருவிழா முடிவடைந்த நிலையில் அந்த விழாவை சுமுகமாக நடத்தியது சம்பந்தமாக இந்து அறநிலையத்துறை இணை ஆணையர் முத்துதியாகராஜன், மதுரை ஐகோர்ட்டில் அறிக்கை தாக்கல் செய்தார்.

அதில், கூறி இருப்பதாவது:-

குங்கும காளியம்மன் கோவிலில் கடந்த 17-ந் தேதி கொடியேற்றத்துடன் திருவிழா தொடங்கி 28-ந் தேதி வரை கோர்ட்டு உத்தரவிட்டபடி பாரம்பரிய முறையில் நடத்தப்பட்டது. போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டு இருந்தது. அனைத்து சமுதாயத்தினரும் விழாவில் கலந்து கொண்டனர். எந்த வித பாகுபாடும் இல்லாமல் திருவிழா நடந்தது.

### அசம்பாவிதம் இல்லை

சிலர் பல்லக்கு தூக்கும் உரிமை கோரினர். அவர்களை அழைத்து பேசி சுமூக தீர்வு காணப்பட்டது. அசம்பாவிதம் எதுவும் நடக்கவில்லை. இதே போன்று சொர்ணமூர்த்தீசுரர் கோவில் திருவிழாவையும் அமைதியாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டு இருந்தது.

இந்த மனுவை நீதிபதிகள் வி.ராமசுப்பிரமணியன், வி.எம்.வேலுமணி ஆகியோர் விசாரித்தனர். முடிவில், சொர்ணமூர்த்தீசுவரர் கோவில் திருவிழாவையும் அமைதியான முறையில் நடத்தி, அதுதொடர்பான அறிக்கையை கோர்ட்டில் தாக்கல் செய்ய வேண்டும் என்று இந்து அறநிலையத்துறை இணை ஆணையருக்கு உத்தரவிட்டனர்.

தினமலர் - ஜூலை-1-2014

# கண்டதேவி கோயில் திருவிழா அமைதியாக நடத்த வேண்டும்

## ஐகோர்ட் கிளை உத்தரவு

மதுரை, ஜூலை 1–

சிவகங்கை மாவட்டம் கண்டதேவி சொர்ண மூர்த்தீஸ்வரர் கோயில் திருவிழாவை, அமைதியாக நடத்த மதுரை ஐகோர்ட் கிளை உத்தரவிட்டது.

கண்டதேவியைச் சேர்ந்த சொர்ணலிங்கம், ''கண்டதேவி சொர்ண மூர்த்தீஸ்வரர் கோயிலில், 7 ஆண்டுகளாக தேரோட்டத்துடன் திருவிழா நடத்தவில்லை. தேர் பராமரிப்பு பணி நடப்பதாகக்கூறி, கோயில் நிர்வாகம் தாமதிக்கிறது. விழா நடத்த உத்தரவிட வேண்டும்,'' என மனு செய்தார்.

நீதிபதிகள், 'பாரம்பரிய முறைப்படி, விழா நடத்த அறநிலையத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். தேரை பழுதுபார்க்க வேண்டும். தேரோட்டம் இன்றி விழா நடத்த வேண்டும். நாட்டார்கள் உட்பட யாரும் முதல்மரியாதை கோரக்கூடாது. போலீஸ் பாதுகாப்புடன் ஜாதி, இன வேறுபாடின்றி, அனைவரும் பங்கேற்கலாம். இந்த உத்தரவு நிறைவேற்றப்பட்டது குறித்து, அரசுத்தரப்பில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்,' என உத்தரவிட்டது.

நீதிபதிகள் வி.ராமசுப்பிரமணியன், வி.எம்.வேலுமணி கொண்ட பெஞ்ச் முன் மனு நேற்று விசாரணைக்கு வந்தது. அறநிலைய இணை கமிஷனர் தாக்கல் செய்த அறிக்கை:

தேரை புதுப்பிக்கும் பணி நடக்கிறது. குங்குமக்காளியம்மன் கோயில் திருவிழா, ஜூன் 17 ல் துவங்கி, 28 ல் முடிந்தது. பாரம்பரிய முறைப்படி, போலீஸ் பாதுகாப்புடன் நடந்தது. பாகுபாடின்றி அனைத்து சமூகத்தினரும் பங்கேற்றனர். சிலர் பல்லக்கு தூக்க உரிமை கோரினர். பேச்சுவார்த்தையில் சுமூக தீர்வு ஏற்பட்டது. சொர்ண மூர்த்தீஸ்வரர் கோயில் திருவிழா ஜூலை 2 ல், துவங்குகிறது. அமைதியாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, என குறிப்பிட்டார்.

நீதிபதிகள், 'விழாவை அமைதியாக நடத்தி, கோர்ட்டுக்கு ஜூலை 4 ல் தெரிவிக்க வேண்டும்,' என்றனர்.

தி இந்து - ஜூலை - 2 - 2014

# Kandadevi temple car festival mired in controversy

D. J. Walter Scott

**DEVAKOTTAI (SIVAGANGA):** The Kandadevi temple car, which came to a grinding halt in 1998 after Dalits asserted their right to pull it, has been in the centre of controversy ever since it was rolled out with four 'vadams' (ropes), exclusively meant for caste Hindus, more than 200 years ago.

The raging controversy refused to die down even after Mahatma Gandhi attempted to broker peace between the 'Nattars' (Kallars) and Dalits during his visit to Devakottai on January 28, 1934. At his meeting with the Nattars, Mahatma Gandhi appealed to them to "do justice to the Harijans and treat them kindly as brothers." This year's Aani (June-July) festival of the Sri Swarnamurtheeswarar Temple, popularly known as Kandadevi temple, begins on Wednesday amid the controversy. The 10-day main festival begins with flag hoisting after the Madras High Court cleared the decks a fortnight ago.



**PULLING ON:** *A view of Swarnamurtheeswarar Temple and car at Kandadevi near Devakottai in Sivaganga district.* – PHOTO: L. BALACHANDAR

The festival is expected to pass off peacefully as the Madurai Bench of the Madras High Court had said 'no' to two contentious issues – pulling of the temple car and according special honours to the heads (Ambalams) of four 'nadus.'

"We have taken all efforts to ensure that the festival is held peacefully in compliance with the High Court order," Superintendent of Police Ashwin M. Kotnis told *The Hindu.* He said 120 police personnel, including a company of Tamil Nadu Special Police, had been deployed for the festival.

Dravidian leader P. R. Chandran, who has done extensive research on the issue, said the temple was built during the Nambi Pallavarayan period about 1,000 years ago and the car festival witnessed the first major law and order problem in 1875 when eight people were killed in a clash. After the British intervened, the temple car was entrusted with the Devakottai Zamin in 1895, but the 'Nattars' got it back a year later and resumed the festival in 1896. "The festival was held every year since 1896, but not without clashes and controversies after cultural and societal changes started taking place," Mr. Chandran says in his book "Porum Therum."

From time immemorial, only the 'Nattars' or Ambalams of four 'Nadus' – Iruvaseri, Unjanai, Semponmari and Thennilai – were allowed to pull the car, while Dalits were asked to push it from behind, whenever it got stuck, he says in the book.

Alleging discrimination, Dalit Viduthalai Koottamaippu leader V. Karunanidhi said, "We oppose the recognition of the 'Nattars' and 'Nadus,' which are symbols of slavery and Dalit discrimination." Though Dalits took part in the temple festival and worship, they were not given a free hand in car pulling and performance of 'mandagapadi,' he lamented. Even now, only caste Hindus are allowed to perform 'mandagapadis.'

Denying Dalit discrimination, M. Athmanathan, Kandadevi Nattu Ambalam (coming under Unjaini Naadu), said the 'Nattars' wholeheartedly accepted Dalit participation in the car festival and it was unfortunate some vested interests kicked up a row.

The temple festival has lost its sheen this year as the car festival could not be held and the 'Nattars' were not involved in organising the festival, he said. "The festival will regain its grandeur only if the 'Nattars' are involved," he said. The 'Nattars' are only interested in organising the historic festival in a grand manner and never wanted to discriminate Dalits and other communities, he added.

தினமலர் - ஜூலை - 5 - 2014

# கண்டதேவி தேர் சீரமைப்பு

## ஐகோர்ட் உத்தரவு

மதுரை, ஜூலை 5–

சிவகங்கை கண்டதேவி சொர்ண மூர்த்தீஸ்வரர் கோயில் தேரை, அடுத்த ஆண்டிற்குள் பழுது நீக்கி புதுப்பிக்க வேண்டும் என, மதுரை ஐகோர்ட் கிளை உத்தரவிட்டது.

'கண்டதேவி சொர்ணமூர்த்தீஸ்வரர் கோயிலில், 7 ஆண்டுகளாக தேரோட்டத்துடன் திருவிழா நடத்தவில்லை. தேர் பராமரிப்பு பணி நடப்பதாகக் கூறி, கோயில் நிர்வாகம் தாமதிக்கிறது. விழா நடத்த உத்தரவிட வேண்டும்,' என கண்டதேவி சொர்ணலிங்கம், ஐகோர்ட் கிளையில் மனு தாக்கல் செய்தார்.

நீதிபதிகள், 'விழாவை அமைதியாக நடத்தி, கோர்ட்டுக்கு தெரிவிக்க வேண்டும்,' என்றனர்.

நீதிபதிகள் வி.ராமசுப்பிரமணியன், வி.எம்.வேலுமணி கொண்ட பெஞ்ச் முன், விசாரணைக்கு வந்தது. மனுதாரர் வக்கீல் நாராயணகுமார் ஆஜரானார். அறநிலைய இணை கமிஷனர், 'விழா ஜூலை 2 ல் துவங்கியது. சுமூகமாக நடக்கிறது,' என அறிக்கை தாக்கல் செய்தார்.

சிவகங்கை சமஸ்தானம் வக்கீல் சீனிவாசராகவன், "தேர் பராம்ரிப்பு பணிக்கு, மறு டெண்டர் விட வேண்டியுள்ளது. இதற்கு நிதி உதவி செய்ய பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயில் தேவஸ்தானம் முன்வந்துள்ளது," என்றார்.

நீதிபதிகள், 'அடுத்த ஆண்டு திருவிழாவிற்குள் தேரை புதுப்பிக்க வேண்டும். பழநி கோயில் உட்பட வேறு எந்த கோயில்கள் உதவி செய்தாலும், அந்நிதியை பயன்படுத்தலாம்,' என்றனர்.

தினத்தந்தி - ஜூலை-5-2014

### கண்டதேவி கோவிலில்

# தேர் பராமரிக்கும் பணியை அடுத்த ஆண்டுக்குள் முடிக்க வேண்டும்

## ஐகோர்ட்டு உத்தரவு

மதுரை, ஜூலை.5–
சிவகங்கை மாவட்டம் கண்டதேவி கோவில் திருவிழாவை நடத்த உத்தரவிடக்கோரி பெரி.சொர்ணலிங்கம் என்பவர் மதுரை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். பாரம்பரிய முறைப்படி கோவில் திருவிழாவை நடத்த ஐகோர்ட்டு உத்தரவிட்டது. சொர்ணமூர்த்தீசுவரர் கோவில் திருவிழா தொடங்குவதற்கு முன்பு நடத்தப்படும் குங்கும காளியம்மன் கோவில் திருவிழா வழக்கமாக நடத்தப்பட்டது குறித்து இந்து அறநிலையத்துறை அதிகாரிகள் ஐகோர்ட்டில் அறிக்கை தாக்கல் செய்தனர். தற்போது, சொர்ணமூர்த்தீசுவர் கோவில் திருவிழா நடந்து வருகிறது.

இந்த நிலையில் நேற்று அந்த வழக்கு நீதிபதிகள் வி.ராமசுப்பிரமணியன், வி.எம்.வேலுமணி முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

அப்போது சிவகங்கை சமஸ்தானம் தரப்பில், தேர் பராமரிப்பு பணி அடுத்த ஆண்டு நிறைவு பெற்று விடும் என்று தெரிவிக்கப்பட்டது. இதை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், அடுத்த ஆண்டு திருவிழா தொடங்குவதற்கு முன்பு தேர் பராமரிப்பு பணியை முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

தினகரன்-ஜூலை-20-2014

# கண்டதேவி கோயிலை மறித்த வேலிக்கு எதிர்ப்பு

தேவகோட்டை, ஜூலை 20—

தேவகோட்டை அருகே கண்டதேவியில் சொர்ணமூர்த்தீஸ்வரர் கோயில் பின்புறம் மகா லிங்கமூர்த்தி கோயில் ஊரணி உள்ளது. விழாக் காலங்களில் இக்கோயிலில் பூஜைக்குப்பின் தான் சுவாமி புறப்பாடு நடக்கும். இக்கோயில் அருகில் உள்ள படித்துறையில் ஆடி, தை அமா வாசையில் மூதாதையருக்கு தர்ப்பணம் செய்வர்.

நேற்று முன்தினம் மாலை இக்கோயில், ஊரணி படித்துறைக்கு செல்ல முடியாதபடி கம்பி வேலி வைத்து அடைக்கப்பட்டிருந்தது. இதற்கு கிராமத்தினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இன்ஸ்பெக்டர் பரக்கத்துல்லா, தாசில்தார் கயல்விழி உள்ளிட்ட அதிகாரிகள் விசாரணையில், வேலி அமைத்ததாக ஊராட்சி தலைவர் முருகன் தெரிவித்தார். 'வேலியை பிரிக்க வேண்டும்' என கிராமத்தினர் கூறினர்.

அதிகாரிகள் பேச்சு நடத்தி, ஒரு ஓரத்தில் வழி ஏற்படுத்தப்பட்டது. 2 நாட்களுக்குள் வேலி முழுவதையும் அகற்றிவிட்டு, கிராமத்தினரிடம் கருத்து கேட்டு அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டது.

ஊராட்சி தலைவர் முருகன் கூறுகையில், ''சடாயு தீர்த்தம் என்னும் புண்ணிய பகுதியாக கருதப்படும் இந்த இடத்தில் அமாவாசை காலங்களில் தர்ப்பணம் செய்கின்றனர். இந்த இடத்தை சிலர் அசுத்தப்படுத்துகின்றனர். பாதையுடன் வேலி அமைத்து, கதவு போட திட்டமிட்டு இருந்தேன். வெளியூர் சென்ற நேரத்தில், முழுவதும் அடைத்து விட்டனர்,'' என்றார்.

தினத்தந்தி - ஆகஸ்டு - 12 - 2014

# கோயில் திருவிழா நடத்த ஐகோர்ட் நிபந்தனை


## பேச்சுவார்த்தை நடத்த உத்தரவு

மதுரை, ஆக. 12: பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாவிட்டால் திருவிழா நடத்தக்கூடாது என ஐகோர்ட் மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தாலுகா மேலச்செம்பொன்மாரி கிராமத்தை சேர்ந்த காளிமுத்து, ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனு:

எங்கள் கிராமத்தில் பொட்டல் காளியம்மன் கோயில் உள்ளது. பங்குனி மாத திருவிழாவில் ஆடுகள் பலியிடப்பட்டு படையல் வைத்து வழிபடும் நிகழ்ச்சி நடக்கும். இதில் ஆறுமுகம் என்பவர் தலைமீட்டின் பேரில் நான், திருவிழாவில் கலந்து கொள்ள தடை விதித்துள்ளனர். நான் திருவிழாவில் பங்கேற்க எனக்கு போலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி என்.கிருபாகரன் பிறப்பித்த உத்தரவு:



கடவுள் என்பவர் ஜாதி, மதத்திற்கு அப்பாற்பட்டவர். மற்ற சமூகத்தினரை அனுமதிக்க முடியாது என்பது நடைமுறை பழக்கமாக இருந்தாலும், கோயில் திருவிழா என்பது இருதரப்பினரின் மோதலுக்கான இடமாக இருக்கக்கூடாது. எனவே வரும் 18ம் தேதி இருதரப்பினரும் ஆர்டிஓ முன்பு ஆஜராகி பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். இதில் ஏற்படும் முடிவு இருதரப்பையும் கட்டுப்படுத்தும். ஒருமித்த முடிவு ஏற்படாவிட்டால் திருவிழா கொண்டாடக்கூடாது. மீறி திருவிழா நடந்தால் சட்டம் ஒழுங்கு பிரச்னை ஏற்பட வாய்ப்புண்டு. இதில் போலீசாரை குறை கூறக்கூடாது என மனுவை முடித்து வைத்தார்.

தினமலர் - ஆகஸ்டு - 12 - 2014

# கடவுள் வழிபாட்டில் பாகுபாடா

## ஐகோர்ட் உத்தரவு

மதுரை, ஆக. 12—

தேவகோட்டை அருகே கோயில் திருவிழா தொடர்பான வழக்கில், 'கடவுள் ஜாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டவர்; பொதுவானவர். தேவையற்ற வகையில் சட்டம் ஒழுங்கு பிரச்னை ஏற்பட்டு, போலீசார் மீது குற்றம் சாட்டக் கூடாது. ஆர்.டி.ஓ., தலைமையில் சமாதானக் கூட்டம் நடத்த வேண்டும்,' என மதுரை ஐகோர்ட் கிளை உத்தரவிட்டது.

தேவகோட்டை அருகே கலிப்புலி காளிமுத்து தாக்கல் செய்த மனு: எங்கள் ஊரில் பொட்டல் காளியம்மன் கோயில் உள்ளது. பங்குனித் திருவிழாவில் ஆடுகள், கோழிகள் பலியிடுவோம். ஆறுமுகம் என்பவர்,'திருவிழாவில் எங்களை அனுமதிக்க முடியாது,' என எதிர்ப்புத் தெரிவிக்கிறார். போலீஸ் பாதுகாப்புடன், எங்களை விழாவில் பங்கேற்க அனுமதிக்க உத்தரவிட வேண்டும், என குறிப்பிட்டார்.

நீதிபதி என்.கிருபாகரன் முன், மனு விசாரணைக்கு வந்தது. மனுதாரர் வக்கீல் அருண் சாமிநாதன் ஆஜரானார். ஆறுமுகம் தரப்பில், 'வழக்கப்படி திருவிழா படையலின்போது ஆண்கள் மட்டுமே பங்கேற்பர்.

இந்த நடைமுறை 100 ஆண்டுகளாக பின்பற்றப்படுகிறது. காளிமுத்து தேவையின்றி மற்ற சமூகத்தினரை அனுமதிக்க கோருகிறார். இதை ஏற்க முடியாது,' என வலியுறுத்தப்பட்டது.

அரசு வக்கீல்," தேவகோட்டை தாசில்தார் முன்னிலையில், சமாதானக் கூட்டம் நடந்தது. காளிமுத்து பங்கேற்கவில்லை. ஆர்.டி.ஓ., தலைமையில் விரைவில் சமாதானக் கூட்டம் நடக்கும்," என்றார்.

**நீதிபதி என்.கிருபாகரன்:** கடவுள் ஜாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டவர்; அனைவருக்கும் பொதுவானவர். அதை யாரும் தடுக்க முடியாது. மற்ற சமூகத்தினரை அனுமதிப்பதில்லை என்ற நடைமுறை காலங்காலமாக பின்பற்றப்பட்டாலும், இது கோயில் திருவிழா சம்பந்தமான பிரச்னை.

இரு பிரிவினருக்கு இடையே மோதல் ஏற்படும் இடமாக, கோயில் இருக்கக் கூடாது. சமூகமாக கையாள வேண்டும். இருதரப்பினரும் ஆக.,18 ல், ஆர்.டி.ஓ., தலைமையில் நடக்கும் சமாதானக் கூட்டத்தில் ஆஜராக வேண்டும்.

அதில் ஏற்படும் உடன்பாட்டிற்கு, இருதரப்பும் கட்டுப்பட வேண்டும். ஒருமித்த முடிவு ஏற்படாவிட்டால், திருவிழா நடத்தக்கூடாது. மீறி விழா நடத்தி, சட்டம்ஒழுங்கு பிரச்னை ஏற்பட்டால், போலீசார் மீது குற்றம் சாட்டக் கூடாது, என்றார்.